பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 05 புதன்கிழமை 21.03.2023 கதிர் 132

## இனி அது ரகசியம் அல்ல!

'நாய்க்குக் கல்லெறி எங்கு பட்டாலும் அது ஒரு காலைத் தூக்கிக் கொண்டு நொண்டியபடிதான் ஓடும்' என்பார்கள். அது போன்றதுதான் சிலரின் பேச்சுகளும். எங்கு, எது பற்றிப் பேசினாலும் ஒரே விடயத்தைத் தொடாமல் விட மாட்டார்கள். சில அரசியல் தலைவர்களும் அப்படித்தான். அவர்களின் 'கீறல் விழுந்த றெக்கோட்' பெரும்பாலும் மாறுவதில்லை. அப்படியானவர்கள் யார் என்பது நம் வாசகர்களுக்கு நன்கு தெரியும்.

அப்படிப்பட்ட தகவல் ஒன்றுதான் இன்றும். 'எக்ஸ்ட்ராவாக' - மேலதிகமாக - ஒரு விடயம்.

அது (ஸ்)தல புராணம் பற்றியது. வழக்கமாக பெருமைமிக்க இந்து கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் ஒன்று அல்லது பல தல புராணங்கள் இருக்கும். திருக்கோணேஸ்வரர் கோயிலுக்கு இராவணனுடன் தொடர்பட்டு தலபுராணம் உள்ளமை நாம் அறிந்ததுதான்.

அதுபோல நேற்று முளைத்த புதிய இந்துத் தலம் ஒன்றுக்கும் புதிதாக தலபுராணமும் கிடைத்து இருக்கின்றது.

இவையெல்லாம் நேற்று முன்தினம் மன்னாரில் நடைபெற்ற

☞2

### உள்ளூராட்சி சபைத் தேர்தலை வலியுறுத்தி

# மக்களின் மாபெரும் போராட்டம் நாலாதிசையெங்கும் வெடிக்கும்



அரசுக்கு அநுரகுமார எச்சரிக்கை



உள்ளூராட்சி சபைகளின் அதிகார காலம் நிறைவுக்கு வந்துள்ளது. தேர்தலை அரசு உடனடியாக நடத்த வேண்டும். இல்லையேல் தேர்தலை வலியுறுத்தும் மக்களின் மாபெரும் போராட்டம் நாட்டின் நாலாதிசையெங்கும் வெடிக்கும்.

இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க.

ஹோமாகம

☞2

## கடன்மறுசீரமைப்பு குறித்து இன்னமும் தீர்மானமில்லை

### சொல்கிறார் அயலுறவுத்துறை அமைச்சர்



எமக்கான கடன் மறுசீரமைப்பு எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் இன்னமும் முடிவான தீர்மானங்கள் காணப்படாமை பிரச்சினையாகவுள்ளது. எனினும், நாம் அனைத்து கடன்வழங்குநர்களையும் சமமாக நடத்தவேண்டும் என்பதில் உறதியாக இருக்கின்றோம் என்று அயலுறவுத்துறை அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

இலங்கைக்கு வந்துள்ள பி.பி.சியின் சிறப்புச் செய்தியாளருக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அச்செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு பெருந்தொகையான கடனைவழங்கியநாடு என்ற ரீதியில் சீனாவின் கரிசனைகளை நாம் புரிந்துகொள்கின்றோம். இலங்கையின் கடன் உறுதிப்பாடு மற்றும் அது குறித்த கலந்துரையாடல்களுக்கு எதிரான நிலைப்பாட்டை சீனா கொண்டிருக்கவில்லை.

மாறாக சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட அனைத்து தரப்புப்

☞2

## நாணய நிதிய அறிவிப்பு மகிழ்ச்சி அளிக்கின்றது

### ஜனாதிபதி ரணில் வரவேற்பு

* இலங்கைக்கு ஒரு வரலாற்று மைல்கல்
* 7 பில்லியன் டொலர்கள் வரை நிதியுதவியை பெறமுடியும்
* நாட்டு மக்களுக்கு இன்று விசேட உரை



சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 2.9பில்லியன் டொலர்களை கடனாக வழங்குவதற்கு அனுமதி அளித்துள்ளமை குறித்து மகிழச்சி வெளியிட்டு வரவேற்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் வரலாற்றில் இதுவொருமைல்கல்என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேசநாணயநிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள்

☞2

# சர்வதேச நாணய நிதிய கடனுக்கு அங்கீகாரம்

### நேற்றிரவு கிட்டியது; இன்றும் பணம் வரும்

(தன்வீன்)

கொழும்பு, மார்ச் 21

இலங்கைக்கான 2.9 பில்லியன் கடனுக்குசர்வதேசநாணய நிதியம் அனுமதி வழங்கியுள்ளது.

நிதியத்தின் நிறைவேற்று சபைக் கூட்டம் திங்கட் கிழமை இலங்கை நேரப்படி இரவு நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், இலங்கைக்கான பிணை எடுப்பு கடனுக்கான சம்பிரதாயபூர்வ அனுமதி வழங்கப்பட்டது.

இதனை வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி இரவே தனதுடுவிட்டர்பக்கத்தில்உறுதி செய்தார்.

☞2

## டெலிகொம், லங்கா ஹொஸ்பிட்டல் முதலில் தனியார் மயமாகின்றன

### அந்நிறுவனங்களின் அரச பங்குகளை விற்க முடிவு

ஸ்ரீலங்காடெலிகொம், லங்கா ஹொஸ்பிட்டல் ஆகிய நிறுவனங்கள் வசமுள்ள அரசின் பங்குகளை விற்பனை செய்வதற்கு கொள்கை அளவில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறித்த நிறுவனங்கள் இரண்டும் கொழும்புபங்குச்சந்தைக்கு அறிவித்துள்ளன.

இது தொடர்பில் டெலிகொம் நிறுவத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியின்கையொப்பத்துடன் கொழும்புபங்குச்சந்தைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது,

டெலிகொம் நிறுவத்தின் பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சரவையின் தீர்மானத்திற்கு அமைவாக பங்குகளை விற்பனை செய்யும்தீர்மானம்எடுக்கப் பட்டுள்ளது.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கை அமைச்சின் கீழுள்ள அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு பிரிவினூடாக குறித்த பங்குகளின் விற்பனை தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று அந்தக் கடிதத்தில்

☞2

## நீதிபதிகளின் மதிப்பைக் காக்க உரிய நடவடிக்கை எடுப்போம்

### பேரா. ஜி.எல்.பீரிஸ் அறிவிப்பு



நீதிபதிகளின் கௌரவத்தை பாதுகாப்பதற்காக சட்டத்தின் ஊடாக உரியநடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்று நாடாளுமன்றஉறுப்பினர்பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவலவில் உள்ள சுதந்திர மக்கள் சபை காரியாலயத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

☞2

### நீதிபதிகளை விசாரிக்க முயன்றால்

## மார்ச் 24 புதுக்கடையில் போராட்டம் வெடிக்கும்

### சட்டத்தரணிகள் மகா சபை அறிவிப்பு

தற்போதைய ஆட்சிக்கு எதிராகக் கட்டளை வழங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்களை நாடாளுமன்றத்திற்கு அழைத்து விசாரிக்கும் வகையிலானநகர்வுகள்மேற்கொள்ளப்பட்டால் மார்ச் 24 புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் பெரும் போராட்டத்தினை நடத்தவுள்ளதாக சட்டத் தரணிகள் மகாசபை அறிவித்துள்ளது.

மகாசபையினர்கொழும்பில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தனர். அங்கு சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது எதிர்ப்பார்ப்புக்களைநிறைவேற்றிக் கொள்வதற்காக 9 தடவைகள் காலைவாரியுள்ளார். ஒன்பது சந்தர்ப்பங்களிலும்

☞2

## தலைவர் இன்றியே கூடியது நிதிக் குழு

### ஆளுந் தரப்பிலிருந்து தற்காலிக தலைவர்

தலைவர் இன்றி கூடிய நாடாளுமன்ற நிதிக் குழுவானது, அரசமைப்புக்கு முரணாக ஆளும் தரப்பிலிருந்து தற்காலிக தலைவர் ஒருவரைத் தெரிவு செய்துள்ளது.

நாடாளுமன்ற நிதிக் குழுவானது நேற்றையதினம் நாடாளுமன்றக்குழு அறையில் கூடியது.

இந்தக் குழு கூடியதும், குழுவின் தலைமைப் பதவிக்கு, வர்த்தக அமைச்சர் நளின்பெர்னாண்டோ தற்காலிகத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவரை, மஹிந்தானந்த அழுத்கமகே நிமல்லங்சா ஆகியோர் முன்மொழிந்திருந்தனர்.

இந்தக் குழுவிற்கு எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஒருவரே தலைவராக நியமிக்கப் படவேண்டும் என்று அரசமைப்பில் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தமது தரப்பிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவின் பெயரை ஐக்கிய மக்கள் சக்தி முன்மொழிந்திருந்தது. ஆனால் அதே கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மயந்த திஸாநாயக்கவை அரசதரப்பு தன்னிச்சையாகக் குழுவின் தலைவராக நியமித்தது.

இதனை எதிர்த்த ஐக்கிய மக்கள் சக்தி, மயந்தவைப் பதவி விலகும்படி கேட்டுக் கொண்டது. அதன்படிஅவரும் பதவி விலகினார். இதனால் அந்தப் பதவி வெற்றிடமாகியுள்ளது. அதற்கு மீண்டும் ஹர்ஷடிசில்வாவின்பெயரை ஐக்கிய மக்கள் சக்தி முன்மொழிந்துள்ளபோதும் ஆளும் தரப்பு அதனை ஏற்கவில்லை.

இந்நிலையில்நடைபெற்ற நிதிக் குழுக் கூட்டத்தில் சமூக நலத்திட்டங்களை வழங்குவதற்கான

☞2

## ஜனாதிபதி தேர்தலை நடத்தினால் ரணில் சிறைக்குச் செல்ல நேரிடும்

### வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை



உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தாது கைவிட்டுவிட்டு நேரடியாக ஜனாதிபதித் தேர்தலொன்றுக்குச் செல்லும் தீர்மானத்தினை ஜனாதிபதி ரணில் எடுப்பராக இருந்தால் நீதித்துறையை அவமதித்த குற்றச்சாட்டில் சிறை செல்ல நேரிடும் என்று சுதந்திர மக்கள் சபையின் பங்காளிக்கட்சியான ஜனநாய இடதுசாரி முன்னணியின் பொதுச்செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் வாசதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில்அவர்செய்தியாளர்களிடம்

☞2

## 5 வருடங்களின் பின்னர் மீண்டும் வருகிறது வித்தியா கொலை வழக்கு

யாழ்ப்பாணம், புங்குடுதீவில் 2015ஆம் ஆண்டு பாட சாலை மாணவி சிவலோகநாதன் வித்தியா கடத்தப்பட்டு கூட்டுப் பாலியல் வன் புணர்வுக்குப் பின் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகளின் மேன்முறையீட்டு மனுவைப் பரிசீலிப்பதற்கு உயர் நீதிமன்றம் நாள் குறித்துள்ளது.

இலங்கை முழுவதும் பேரதிர்ச்சியையும்பெரும்அதிர்வலைகளையும் எழுப்பிய இந்தப்பாலியல்படுகொலைச் சம்பவத்தில் குற்றவாளிகள் 7 பேருக்கு யாழ்ப்பாணம்மேல் நீதிமன்றம்தூக்குத்தண்டனை விதித் துத் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக குற்றவாளிகள் சார்பில் உரிய காலத்தில் மேன்முறையீட்டுக்கான அறிவித்தல் உயர் நீதிமன்றத்தில் கொடுக்கப் பட்டிருந்தது.எனினும்வித்தியா கொலைவழக்குத்தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் 6 புத்தகங்களாக உள்ளன. அவை அனைத்தும் தனித் தமிழில் உள்ளன. உயர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக அவற்றைசிங்களத்தில்மொழி பெயர்க்கவேண்டி இருந்தது.

இதுவரையில் அவற்றில் 3 புத்தகங்கள் மட்டுமே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்றுகூறப்படுகின்றது. இந்த மொழி பெயர்ப்பில் ஏற்படும் தாமதத்தை திங்கட் கிழமை நீதிமன்றத்தில்

☞2



## ஐ.பி.எல். களத்தில் யாழ். வீரரும்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிரிக்கெட் வீரரான வியாஸ்காந்த இந்தியாவில் நடைபெறவுள்ள ஐபிஎல் போட்டிக் களத்திற்குச் செல்கிறார். வலைப்பயிற்சிக்கான பந்துவீச்சாளராக அவர் இந்த முறை ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கவுள்ளார்.

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவனான வியாஸ்காந்த் இலங்கை பிரிமியர் லீக் தொடரில் யாழ்ப்பாண அணியில் இடம்பெற்றுள்ளார். சில ஆட்டங்களில் விளையாடியுமுள்ளார்

கடந்த முறை நடைபெற்ற இத்தொடரில் இவரின் திறமைகளைப்

☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நடந்தேறிய சங்கதிகள்தான்.

வழமை போல 'மைக் என்றால் மைசூர் பாகு' மாதிரி விடாமல் பற்றிக்கொள்ளும் கட்சித் தலைவர் மாவையர், மன்னார்க் கூட்டத்திலும் தமது பேச்சுப் 'புலம்பலை' விடவில்லை. ஆனால் வழமைக்குச் சற்று மாறாக இம்முறை 'சிறை மீண்ட செம்மல் புராணம்' பாடாமல், சற்றுப் பிளேட்டைப் புரட்டிப்போட்டு, சிறையில் சித்திரவதைக்கு உள்ளான விவரிப்பைத்தான் மன்னார்க் கூட்டத்தில் அடிக்கடி புலம்பினார். அந்த கொடூரங்களின் வலியால் வராத கண்ணீர், இப்போது கட்சியின் நிலைமையைபார்க்கும்போது வருவதாக அரற்றினார் அவர்.

கட்சியின் இந்த அவல நிலைமையை மாற்றாமல், கட்சித் தலைமையை விட்டு விட முடியாது என்று கோடி காட்டவும் அவர் தவறவில்லை. அதாவது, 'அலை ஓய்ந்ததும் குளிக்கலாம் என்று கடற்கரையில் காத்திருப்பவர் போன்று' கட்சி தலைமையை விட்டு இறங்குவதற்குக் காத்து நிற்கின்றாராம் அவர்.

பாவம்.... தமிழரசு....!

கடைசியாகக் கட்சியின் தேசிய மாநாடு நடைபெற்று நான்கு ஆண்டுகளாகும் நிலைமை. மாநாட்டை நடத்தினால் இறுதியில் மிச்சமாக இருக்கும் கட்சித் தலைமைப் பதவியும் பறிபோய்விடும் என்ற ஆதங்கம், பயம், கவலை அவருக்கு. அதிலிருந்து அடுத்த கட்டத்துக்கு அவர் பாய் வதற்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இல்லை. அல்லது கூட்டமைப்பில் தமிழரசு இல்லை... ஏதோ ஒன்று...!

தமிழரசுத் தலைமைப் பதவியும் போய்விட்டால் இனி வீட்டில் சாய்மனைக் கதிரையில் குந்தி ஒதுங்க வேண்டியதுதான். அதனால் கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தாமல், பிள்ளையார் கல்யாணம்போல நாளைக்கு, நாளைக்கு என்று தள் ளிப்போட்டு, தலைமைப் பதவியைத் தக்க வைக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றார்.

கட்சியின் ஒவ்வொரு மத்திய குழு கூட்டத்திலும், அது நடைபெறும் தினத்தில் இருந்து அடுத்த இரண்டு மாதங்களுக்குள் தேசிய மாநாட்டை நடத்துவது என முடிவு செய்யப்பட்டு இருப்பதாக அறிவித்தல் வரும். அவ்வளவுதான். அந்த வழமைப்படி இப்போது இந்த மார்ச் மத்திய குழு கூட்டத்தில், மே மாதத்தில் மாநாட்டை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கின்றது எனக் கூறப்பட்டது . இனி என்ன, மே மாதம் கூடி, வருட இறுதியில் மாநாடு என்று முடிவு செய்தால் போயிற்று....! அது தான் பெரும்பாலும் நடக்கும்.

இருபது ஆண்டுகளுக்கு முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை ஏற்றார் சம்பந்தன். அவர்தான் அதன் ஆயுள்காலத் தலைவர். என்ன, அவருக்கு முன்னர் கூட்டமைப்பின் ஆயுள் முடிந்து போய்விட்டது. அவ்வளவுதான். அதனால் அவர் இருக்கின்றார், அவர் தலைமை தாங்கக் கூட்டமைப்புத்தான் இல்லை என்ற நிலைமை.

போகிற போக்கில் அப்படித் தமிழரசுக்கும் மாவையர்தான் ஆயுள் காலத் தலைவரோ என்னவோ....? கட்சி நிலைமை அப்படித்தான் தெரிகிறது. எத்தரப்பு முந்துமோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...!

சரி. அடுத்த விடயத்துக்கு வருகிறேன். அது ஆரம்பத்தில் குறிப்பிட்ட தல புராண விவகாரம்தான்.

இப்போது 'ட்ரெண்டிங்' ஆகப் பேசப்படும் விடயங்களில் ஒன்று ஆனையிறவில் பிரம்மாண்டமான சைஸில் எழுந்துள்ள நடராஜர் சிலை. அது அமைந்துள்ள புனித பூமிக்கு(?)த்தான் தலபுராணம் கிட்டிவிட்டது. அதுவும் கூட நம் மாவையர் மகாத்மியம்தான்.

ஆரம்ப காலத்தில் - எழுபதுகளில் - சிறைசென்ற முதல் 42 தமிழ் இளைஞர்களின் மாவையரும் ஒருவர் என்பது நமக்குத் தெரிந்ததுதான். அந்தச் 'சிறைமீண்ட செம்மல்' பற்றிய விடயம்தான் அவர் அடிக்கடி பேசுவதாயிற்றே. சற்று மாற்றாக சிறையில் நடந்த சித்திரவதைகள் பற்றி ஞாயிறு மத்திய குழு கூட்டத்தில் மாவையரின் 'கீறல் விழுந்த றெக்கோட்' பேச்சு அடிக்கடி ஒலித்தது என்று குறிப்பிட்டேன் அல்லவா..?

ஆனயிறவில் சித்திரவதையின் உச்சத்தில் தாம் இறந்து விட்டார் என்று கருதிய படையினர் தம்மை ஆனயிறவின் வீதியோரத்தில் தூக்கி எறிந்து விட்டு சென்றார்கள் என்றும், கடைசி மூச்சில் தப்பிப் பிழைத்துத் தாம் எழுந்து மீண்டார் என்றும் கூட்டத்தில் குறிப்பிட்ட மாவையர், இன்னொரு விடயத்தையும் சேர்த்துச் சொன்னார்.

தம்மைச் சித்திரவதை செய்து தூக்கி எறிந்த இடத்தில் இன்று நடராஜர் சிலை கம்பீரமாக எழுந்து நிற்கின்றது என்பதுதான் அந்த விடயம்.

ஆக, சிறையில் சித்திரவதைக்கு உள்ளான மாவையர் அதன் பின் தூக்கி வீசப்பட்டுக் கிடந்த இடத்தில் நடராஜர் சிலையை அமைக்கச் செய்து, அதற்கு ஒரு தலபுராணம் அப்படி அமையவும் வழி செய்து, அந்த திருவுருவத்தை நிலை நிறுத்தி இருக்கின்றார் நமது கிளிநொச்சிச் சிற்றரசர் - குறுநில மன்னர் - ஸ்ரீதரன்.

நல்ல வேடிக்கைதான் போங்கள்....!

**- இடி மின்னல் -**

## மக்களின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டுமக்களின் முழுமையான ஆதரவு 'திசைகாட்டி' சின்னத்துக்குக் கிடைத்துள்ளது.

ஆளும்தரப்பினருக்கு அரசின் பலம் காணப்பட்டாலும் தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் பலமே போதுமானது.

இந்த மக்கள் பலத்துக்கு - மக்கள்சக்திக்கு அஞ்சியே உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த அரசு பின்னடிக்கின்றது.

தேர்தலை அரசு தொடர்ந்தும் ஒத்திவைக்க முடியாது. 340 உள்ளூராட்சி சபைகளின் அதிகார காலம் நிறைவுக்கு வந்துள்ளது. எனவே, தேர்தலை அரசு உடனடியாக நடத்த வேண்டும். இல்லையேல் தேர்தலை வலியுறுத்தும் மக்களின் மாபெரும் போராட்டம் நாட்டின் நாலாதிசையெங்கும் வெடிக்கும். இதை அரசாலும் அதன் படைகளாலும் தடுக்க முடியாது" - என்றார் அவர்.

## கடன்மறு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பங்காளிகளும் அதில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாகும். எனவே இங்கு கடன் மறுசீரமைப்பு எவ்வாறு மேற்கொள்ளப்படவேண்டும் என்பதே பிரச்சினையாகும்.

இவ்வாறான தொரு பின்னணியில் அனைத்து இரு தரப்புக் கடன்வழங்குனர்களும் ஒரே விதமாக நடத்தப்படவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். எந்தவொரு தரப்பும் சிறப்பாகக் கையாளப்படாது. கடன்களைத் திருப்பிச்செலுத்துவதற்கான ஆற்றலை மீண்டும் அடைந்து கொள்வதிலேயே இப்போது எமது கவனம் எல்லாவற்றையும் குவித்திருக்கின்றோம்.

அதேவேளை 'அம்பாந்தோட்டை துறைமுகத்தில் மேலதிக முதலீடுகளை மேற்கொள்வது குறித்து சீனா முன்மொழிந்துள்ளது. இதுபோன்ற பெரும் செயற்திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளும், அதற்காகப் பெறப்பட்ட கடன்களும் தற்போது இலங்கை முகங்கொடுத்திருக்கும் கடன்நெருக்கடிக்கு ஏதோவொரு வகையில் முக்கிய காரணமாக அமைந்துள்ளன.

மிகமோசமான காலப்பகுதியைத் தற்போது கடந்துள்ளோம் மிகக் கடினமான தீர்மானங்களை ஏற்கனவே மேற்கொண் டுள்ளோம். அதன் ஓரங்கமாகவே வரி வீதங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. மின்சாரம் மற்றும் எரிபொருள் போன்றவற்றுக்கான விலை கள் தற்போது நடைமுறையிலிருக்கும் விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படவுள்ளன.

## சர்வதேச .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அந்தப்பதிவில்., எங்களிற்கான பிணை எடுப்பு கடனை சர்வதேச நாணய நிதியம் அங்கீகரித்துள்ளது. இது நீண்ட பயணம். ஆனால் அனைவரினதும் கடினமான உழைப்பு அர்ப்பணிப்பு காரணமாக நாங்கள் சிறந்த நாட்களை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றோம். இந்த முக்கியமான நோக்கத்தை அடைவதற்கு பாடுபட்ட ஜனாதிபதிக்கும் இலங்கைக்கு கடன்வழங்கிய அனைவருக்கும் நன்றி எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாதத்தின் தொடக்கத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கைக்கு அமைவாக இலங்கைக்கு பாரீஸ் கழகம், சீனா, இந்தியா உள்ளிட்ட பெரும் இருதரப்பு கடன் வழங்குநர்களிடமிருந்து அவர்களின் கடன் மறுசீரமைப்பு உறுதிப்பாட்டுக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இதனை அடுத்தே சர்வதேச நாணய நிதியம் மேற்படி கடன் வழங்கும் முடிவினை எடுத்துள்ள தோடு, முதற்கட்டமாக 290 மில்லின் டொலர் களை வழங்கவுள்ளது. அனேகமாக இன்று இரவுக்குள் அந்தப்பணம் இலங்கைக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், இலங்கைக்கு முன்னெப்போதும் இல்லாத சவால்களில் இருந்து பொருளாதாரத்தை மீட்பதற்கும், அனைத்து பங்குதாரர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு தேவையான

## நாணய நிதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வரையிலான நிதியுதவியை இலங்கை பெறுவதற்கு இந்தக் ககடன் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை சுதந்திரமடைந்து கடந்த 75 வருடங்களில் எமது பொருளாதார எதிர்காலத்திற்கு இதனைவிட மிகவும் நெருக்கடியான காலகட்டம் இருந்ததில்லை. எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியான மற்றும் சாதகமான செயற்பாடுகளைத் தொடர்ந்து தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

சர்வதேச நாணய நிதியம், சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் பல்தரப்பு அமைப்புகளிடமிருந்து 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையிலான நிதியுதவியை இலங்கைக்கு பெறும் வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழுவினால் எமது திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

தொடக்கத்திலிருந்தே, நிதி நிறுவனங்களுடனும் எங்கள் கடன்வழங்குபவர்களுடனும் நாங்கள் நடத்திய அனைத்து பேச்சு முழு வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்பட்டன.

தூரநோக்கான பொருளாதாரக் கொள்கை மற்றும் எமது இலட்சிய சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் மூலம் பொருளாதாரம் நீண்ட கால மீட்சியை எதிர்பார்க்கும். இந்த நேரத்தில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் நமது சர்வதேச பங்காளிகள் அளித்த ஆதரவிற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஜூலை மாதம் நான் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற நாளில் இருந்து, இலங்கையின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தி, நிலையான கடன் நிலையை அடைவதே எனது முன்னுரிமையாக இருந்தது. அதற்காக சில கடினமான முடிவுகளை எடுத்தோம்.

ஆனால், நமது சமூக பாதுகாப்பு வலையமைப்பை விரிவுபடுத்தவும், பாதிக்கப்படக்கூடிய தரப்பினர்களை பாதுகாக்கவும், ஊழலை முற்றாக ஒழிக்கவும், அனைவரையும் உள்ளடக்கிய, சர்வதேச அளவில் கவர்ச்சிகரமான பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதை உறுதிசெய்வதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட் டோம்.

இந்த நோக்கை அடைவதற்கு சர்வதேச நாண நிதியத்தின் திட்டம் மிகவும் முக்கியமானது. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கும் கடன் நிலைத்தன்மையை அடைவதற்கும் நாம் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம்.

எங்களின் அனைத்து கடன் வழங்குநர்களுடனும் நாங்கள் தொடர்ந்து தொடர்பு பட்டிருக்கிறோம். மேலும் எங்கள் பணி முன்னோக்கிச் செல்லும் சூழலில் ஒருங்கிணைப்பை வலுப்படுத்தவும் மேம்படுத்தவும் எமது கடன்வழங்குநர்களை ஊக்குவிக்கிறேன்.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டம் இலங்கையின் நிலையை மேம்படுத்துவதற்கும் சர்வதேச மூலதனச்சந்தைகளை அணுகுவதற்கும் இன்றியமையாததாக இருக்கும். மேலும் முதலீட்டாளர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் திறமைகளுக்கு இலங்கை ஒரு ஈர்ப்புள்ள நாடு என்பதை மீண்டும் நிரூபிக்கும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 2022 செப்டெம்பர் முதலாம் திகதி சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை, நீட்டிக்கப்பட்ட நிதி வசதி ஊடாக அனுசரணை வழங்கும் நான்கு வருட வேலைத் திட்டத்திற்காக அதிகாரிகள் மட்ட உடன்படிக்கையை மேற்கொண்டது.

0.33 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இந்தத் திட்டத்தின் ஊடாக பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மற்றும் இலங்கையின் நிதிக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் அதேவேளையில் முழுமையான பொருளாதார உறுதிப்பாடு மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செப்டெம்பரில் இருந்து, இலங்கை அரசு, நாட்டின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் தொடர்பில் பங்குதாரர்களை அறிவூட்டவும், வெளிப்படைத் தன்மையுடன் தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் உத்தியோகபூர்வ கடன்வழங்குனர் கூட்டங்களை நடத்தியது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழுவின் அனுமதியைத் தொடர்ந்து, இந்த திட்டத்தின் கீழ் முதலாவது தவணையாக சுமார் 0.33 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எதிர்வரும் நாட்களில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## டெலிகொம், ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, லங்கா ஹொஸ்பிட்டல் நிறுவனத்தின் செயலாளர், எமது நிறுவனத்தின் பிரதான பங்கு உரிமையாளரான அரசின் பங்கு விற்பனையுடன் தொடர்புடைய கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது என்பதை அறித்தருகின்றேன் என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## நீதிபதிகளின் ....

2023ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை விடுவிக்காமல் இருக்கும் திறைசேரியின் செயற்பாட்டுக்கு எதிராக உயர் நீதிமன்றம் கடந்த 03ஆம் திகதி இடைக்கால தடையுத்தரவை பிறப்பித்தது.

இந்நிலையில் ஆளும் தரப்பு உறுப்பினர்களான தொலவத்த, செஹான் சேமசிங்க ஆகியோரின் சிறப்புரிமை வலியுறுத்தலுக்கு அமைய உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளை நாடாளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு அழைத்து, பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவு தொடர்பில் விசாரணை நடத்த ஆட்சியாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் பல ரிட் மனுக்கல் உயர்நீதிமன்றத்தில் விசாரணயில் உள்ளன. நீதிமன்ற விசாரணையில் உள்ள ஒருவிடயத்தை நாடாளுமன்ற சிறப்புரிமைக்குள் இருந்துக் கொண்டு விமர்சிக்கவோ அல்லது அந்த வழக்கு தொடர்பில் கருத்துக்களை முன்வைக்கவோ கூடாது என்பது உலக நாடுகளில் பின்பற்றப்படும் ஒரு நெறிமுறையாகும். இந்த அடிப்படை நாகரிகம் கூட ஆட்சியாளர்களிடத்தில் இல்லை என்பது கவலைக்குரியது.

நீதிமன்றத்துக்கு கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு இல்லை. உயர்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால தடையுத்தரவால் நாடாளுமன்றத்தின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது என்று ஆளும் தரப்பினர் குறிப்பிடுவது அடிப்படையற்றது, நிறைவேற்றுத்துறையால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடாளுமன்றத்தை நீதித்துறை பாதுகாத்துள்ளது.

நிறைவேற்றுத்துறையின் ஆலோசனைக்கு அமைய நீதிமன்றத்தை மலினப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதை ஆளும் தரப்பின் இளம் உறுப்பினர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

நாடாளுமன்ற சிறப்புரிமைக்குள் இருந்து கொண்டு உயர் நீதிமன்றத்தை விமர்சிக்கும் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் அதிகா ரம் உயர் நீதிமன்றத்துக்கு உண்டு. நீதித்துறை மற்றும் நீதிபதிகளின் கௌரவத்தை பாதுகாப்பதற்கு சட்டத்தின் ஊடாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம் - என்றார்.

## தலைவர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) காணக்கெடுப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. அது தொடர்பில் மீண்டும் கலந்து ரையாடுவதற்காக இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு மீண்டும் கூடுவதென வும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் நிதி அமைச்சு, மின்சாரசபை, மோட்டார் வாகனப் போக்குவரத்து உள்ளிட்ட நிறுவனங்களுக்கு இன்றைய தெரிவுக்குழு கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நளின் பெர்னாண்டோ, மஹிந்தானந்த அழுத்கமகே, மதுவிதான, அனுபபஸ்குவல், சுரேன் ராகவன், நிமல் லங்சா, பாட்டலி சம்பிக்க ரணவக்க, காவிந்த ஜயவர்த்தன உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

வஜிர அபேவர்த்தன, சந்திம வீரக்கொடி, ஹர்சன ராஜபகருணா, மயந்த திஸாநாயக்க, ஹர்ஷ டிசில்வா ஆகியோர் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

குழுவின் புதிய தலைவர் சபாநாகர் முன்னிலையிலேயே தெரிவுசெய்யப்படவேண்டும். இருப்பினும் அடுத்த மாதம் நான்காம் திகதியே குழு சபாநாயகர் தலைமையில் கூடவுள்ளது.

## மார்ச் 24 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தாது இருக்கவே முயற்சித்தார். தேர்லை நடத்தினால் சூழல் தனக்கு சாதகமாக அமையாது என்று கருதியமையே அவரது இந்த முயற்சிகளுக்குப் பின்னுள்ள காரணம்.

நிறைவேற்று அதிகாரத்தின் தீர்மானங்களுக்கு அமைவாக விடயங்கள் நடைபெறவில்லை என்பதால் நீதியரசர்களை நாடாளுமன்ற சிறப்புரிமைக்குழுவிற்கு முன்னால் அழைக்கும் நிலைக்குச் சென்றுள்ளார்.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்கு தொடர்பாக உரையாற்றவோ நாடாளுமன்றம் விசாரணை செய்யவோ முடியாது.

அப்படியிருக்கின்றபோது. மார்ச் 23 நிகழ்ச்சி நிரலில் சிறப்புரிமைக்குழுவின் நான்காவது விடயத்தில் பிரேம்நாத் சி தொலவத்தவின் சிறப்புரிமை விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய தினத்தில் என்ன நடைபெறப்போகின்றது என்பதை பார்ப்போம். அதற்கு மறுதினதான மார்ச் 24 அனைத்துச் சட்டத்தரணிகளும் ஒன்றிணைந்து, புதுக்கடை வளாகத்தில் பெரும் போராட்டத்தினை முன்னெடுப்போம் - என்றார்.

## ஜனாதிபதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பேசுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திர மக்கள் சபையானது, ஜனாதிபதித் தேர்தலொன்று நடைபெறுவதற்கான சூழல்கள் அமைந்துவருவதை உணர்ந்துள்ளது. அதுபற்றிக் கலந்துரையாடியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும் என்பதே தேவையாக உள்ளது. ஆனால், அவரால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தாது அதனைக் கடந்து ஜனாதிபதி தேர்தலுக்குச் செல்ல முடியாது.

அரசமைப்பின் பிரகாரம் அவரால் அவ்வாறு பயணிக்க முடியாது. அவ்வாறு செல்வதற்கு நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி என்ற வகையில் அவர் முயற்சிப்பாகராக இருந்தால் பெரும் பிரச்சினைகள் ஏற்படும்.

குறிப்பாக, நிறைவேற்று அதிகாரத்திற்கும், நீதித்துறைக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றும். அது, ஜனாதிபதி சிறைசெல்லும் நிலைமைகளையும் ஏற்படுத்தும். நீதித்துறையை அவமதித்தமையை அடியொன்றியே அவ்விதமான நிலைமை ஏற்படும் என்றார்.

## ஐந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சுட்டிக்காட்டிய குற்றவாளிகள் தரப்பு சட்டத்தரணிகள், அது வரையில் தமது தரப்பினர் சிறையில் வாடுகின்றனர், அது நியாயமற்றது என்று வாதிட்டனர்.

இதனை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் ப்ரீத்தி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு, வழக்கு நடவடிக்கைகளுக்கு அத்தியாவசியமானவை என்று கருதப்படும் பகுதிகளைக் குற்றவாளிகளின் சட்டத் தரணிகளை அடையாளம் காட்டும்படியும் அவற்றை மட்டுமாவது விரைவாக மொழிபெயர்த்துக்கொண்டு வழக்கை விசாரணைக்கு ஏற்பதா இல்லையா என்பதை பரிசீலிக்கலாம் என்றும் அறிவித்தனர். அதற்காக ஒக்டோர் 6 அவர்கள் நாள் குறித்தனர்.

5 நீதிபதிகளைக் கொண்ட ட்ரயல் அட் பார் விசாரணையைக் குற்றவாளிகள் தரப்பு கேட்டிருக்கின்றது. ட்ரயல் அட் பார் விசாரணையிலும் தண்டனை உறுதிப்படுத்தப்பட்டால் அதனை எதிர்த்து மேன்முறையீடு செய்ய முடியாது.

இந்த வழக்கு நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்பட்டபோது குற்றவாளிகளான சுவிஸ் குமார் உள்ளிட்ட 7 பேரும் பலத்த பாதுகாப்புடன் சிறைச்சாலை அதிகாரிகளால் உயர் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இந்த வழக்கில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் 2017 செப்டெம்பர் 27 தீர்ப்பு வழங்கியது. கிட்டத்தட்ட 6 வருடங்கள் கழித்து அதன் மேன்முறையீட்டு மனு பரீசிலிக்கப்படவுள்ளது. அதுவரையில் குற்றவாளிகள் சிறையிலேயே அடைக்கப்பட்டுள்ளனர்.

குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனைக்கு மேலதிகமாக, 30 வருட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

புங்குடுதீவைச் சேர்ந்த 18 வயதான பாடசாலை மாணவியான வித்தியா 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி பாடசாலை முடிந்து வீடு திரும்பும் போது காணாமற் போயிருந்தார். இரண்டு நாள்கள் கழித்து பாழடைந்த வீடு ஒன்றினுள் இருந்து அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் கூட்டு வன்புணர்வின் பின்னர் கல்லால் தலையில் தாக்கிக் கொல்லப்பட்டார் என்று சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூறாய்வில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## ஐ.பி.எல். ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பார்த்த பலரும் தேசிய அணியில் உள்வாங்கப்பட வேண்டுமென கோரிக்கைகளை முன் வைத்து இருந்தனர்.

இந் நிலையில் பங்களாதேஷில் இடம்பெற்ற பிரீமியர் லீக் தொடரில் ஏலம் எடுக்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில் உலகளவில் எதிர்பார்க்கப்படுகின்ற இந்தியாவின் ஐபிஎல் தொடரில் வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும் இன்னும் சில தினங்களில் இந்தியாவிற்கு செல்லவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழிலுள்ள விடுதியொன்றில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் யப்னா ஸ்ராலியன் அணியின் செயலாளர் வைத்திய நிபுணர் சு.சிறிதரன் இதனைத் தெரிவித்தார்.

"எமது அணியின் வீரரான வியாஸ்காந்த் இந்தியாவில் நடைபெறவுள்ள ஐபிஎல் தொடரில் இணைந்து கொண்டுள்ளமை அனைவருக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. ஐ பி எல் தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியில் வலைப் பந்து வீச்சாளராக வியாஸ்காந்த் இணைக்கப்பட்டுள்ளார். சில நாட்களில் இந்தியா செல்லவுள்ளார்" என்று தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622



# இந்திய மீனவர் அத்துமீறலை கண்டித்து மார்ச் 23 மாபெரும் எதிர்ப்பு போராட்டம்!

## மன்னார் மீனவ சமாசங்கள் கூட்டாக அழைப்பு



வடக்கு கடல் பகுதியில் வரி அறவீடு செய்து இந்திய மீனவர்களுக்கு வாரத்தில் மூன்று நாள்களுக்கு குத்தகைக்கு வாங்குவது தொடர்பாகவும், இந்திய மீனவர்களின்தொடர்ச்சியாக இலங்கை கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுவதை கண்டித்து வடக்கு மாகாண மீனவர்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலைமாபெரும்எதிர்ப்புஆர்ப்பாட்டம் ஒன்றை மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்க உள்ளனர்.

இந்தவிடயம்தொடர்பாக மன்னாரில் நேற்று (திங்கட்கிழமை) காலைஊடகசந்திப்பு இடம் பெற்றது.

குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுசங்கசமாசசெயலாளர் என்.எம்.ஆலம், மன்னார் மாவட்டகிராமிய சம்மேளனத் தலைவர் ஜஸ்ரின் சொய்சா, மீனவ சமூகம் சார்பாக அன்ரனிசங்கர்ஆகியோர்கலந்து கொண்டனர். இதன் போது அவர்கள் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

குறித்த ஆர்ப்பாட்டத்துக்கு வர்த்தகர்கள் , சிவில் சமூக அமைப்புகள்,தனியார்போக்குவரத்து சங்கங்கள், விவசாயிகள் என அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டுக் குழு சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய மீனவர்களின் வருகையை, இந்தியமீனவர்களுக்கு வரி அறவிட்டு மூன்று தினங்கள் இலங்கைகடற்பரப்பில் தொழில் செய்வதற்கு அனுமதி வழங்குவதை பரிசீலிப்பதாககடந்த22.02.2023 அன்று நாடாளுமன்றத்தில் வெளிவிவகார அமைச்சரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் மாவட்டம் மற்றும் வட மாகாணம் தழுவிய மீனவர்களும் மீனவ சமாசங்களும் தங்களுடைய கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

அதற்கு அப்பால் இந்தத் தீர்மான யோசனையை நாடாளுமன்றத்தில் உடனடியாக நிராகரித்த குறிப்பாக வட மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் உரையையும்நாங்கள்வரவேற்கிறோம்.

அதற்கு அப்பால் இந்த விடயத்தை அரசு பரிசீலனை கூட செய்யாமல் உடனடியாக இதனைக் கைவிட வேண்டும் என்றுவலியுறுத்தியும்,இலங்கை இந்திய பேச்சு, மீனவர்களின் என்பதை கடந்த 2016 இல் எடுத்துக் கொள்ளப்பட்ட நடைமுறைக்கு இணங்க பேச்சு நடைபெறவேண்டும்என்பதை வலியுறுத்தி எதிர்வரும் 23 ஆம் திகதி இந்த ஆர்ப்பாட்டம் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையின் பிரதான பாதையூடாகசென்றுமன்னார் புதிய பஸ் நிலையத்தில் நிறைவடையும்.

இதற்கு அமைவாக வடபகுதியில் இருக்கும் பொது அமைப்புக்கள் , மீனவ சங்கங்கள் , ஏனைய சிவில் சமூகங்கள் அனைத்தும் எம்மோடு இணைந்து இந்த விடயத்துக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் இது மீனவர்கள் சார்ந்த பிரச்சினைகள் மட்டுமல்ல. வடமாகாணத்தில் வாழ்கின்ற அனைவரின் பிரச்சினையாக இருக்கிறது.

இன்று வட பகுதியில் நடைபெறும் இந்த பிரச்சினை எதிர்காலத்தில் இலங்கை முழுவதையும்அவர்கள்ஆக்கிரமிப்பார்கள் என்பதை இங்கு நாங்கள் பதிவு செய்கிறோம்.

எனவே அன்றைய தினம் அனைவரும் முழுமையாக கடல் தொழிலை நிறுத்தி வர்த்தக நிலையங்களை மூடி ஒத்துழைப்பு தருமாறு நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். இதற்கான உத்தியோகபூர்வ கடிதங்களைஅந்தந்தஅமைப்புகளுக்கும் சங்கங்களுக்கும் நாங்கள் விரைவில் அனுப்ப இருக்கிறோம்.

இதற்கு அப்பால் நாங்கள் ஒன்றைக் கூறுகிறோம்.. இலங்கை அரசு இந்திய அரசும் தாங்கள் எதிர் காலத்தில் மேற்கொள்ள இருக்கின்ற அபிவிருத்திக்காக நாட்டின் தேசிய வளங்களை யாருக்கும் கையளிப்பதற்கு அனுமதிக்க முடியாது .

அந்தசெயல்பாடுமூலம் எமது மீனவ சமூகத்தை வறுமைக் கோட்டிற்குள் தள்ளுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்எனத்தெரிவித்தனர்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் வழங்கப்பட்ட

# அரச அலுவலர் வீட்டுத்திட்டம் சீர்கேட்டின் உறைவிடமாகிறது

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் பனிக்கன்குளம் கிராமத்தில் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு 2012 இல் அரச காணியில் 54 காணித்துண்டுகள் வழங்கப்பட்டு ஒரு லட்சம் ரூபா கடனும் வழங்கப்பட்டு அமைக்கப்பட்ட வீடுகளில் எவரும் குடியேறாதநிலையில்பாழடைந்து காணப்படுவதோடு, சமூக சீர்கேடுகளும் இடம்பெற்று வருவதாக பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

2012 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்ட அரச உத்தியோகத்தகர்களுக்கு ஏ9 பிரதானவீதியில்பனிக்கன்குளம் பகுதியில் 54 காணித் துண்டுகள் வழங்கப்பட்டு வீடுகள் அமைக்கப்பட்டன.

ஆனால்அன்றுதொடக்கம் இன்றுவரைகுறித்தவீடுகளில் பல முழுமையாக அமைக்கப்படாதுள்ள நிலையில் சில வீடுகள் முழுமையாக புனரமைக்கப்பட்ட போதும் அதில் எவரும் குடியேறவில்லை.

இதனால்குறித்தவீடுகள் அனைத்தும் பாழடைந்து காணப்படுவதோடுவீட்டுக்குள் பெரியளவவில் புற்றுகள் வளர்ந்து காணப்படுகிறது. அத்தோடு மிக அதிகளவான சமூக சீர்கேடுகளுக்கு வசதியாகவும் குறித்த வீடுகள் அதற்கென்றே அமைத்துக் கொடுக்கப்பட்ட வீட்டுத்திட்டம் போன்று செயற்பாடுகள் காணப்படுவதாகவும் பிரதேச பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் ஒட்டுச்சுட்டான் பிரதேச செயலகம் என்பன உரியகவனம்செலுத்திகுறித்த வீடுகளை இதுவரை வீடுத்திட்ட உதவியைப் பெறாதுள்ள வறிய குடும்பங்களுக்கு மாற்றம் செய்ய முன்வரவேண்டும் எனவும் பொது மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஒட்டுசுட்டான்பிரதேசசெயலாளர்திருமதி ஜெயராணி பரமோதயனை தொடர்பு கொண்டு வினவிய போது,குறித்தவீடுகள்யாருக்கு வழங்கப்பட்டதோ அவர்களை குடியேற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அல்லது அவர்கள் குடியேறாதசந்தர்ப்பத்தில்காணியற்ற ஏனை பொது மக்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இருப்பினும் மேற்படி நடவடிக்கைகள் இன்னமும் முற்றுப்பெறவில்லை எனத் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு பூநொச்சிமுனை பாலம் திருத்தப்படாமையால் மக்கள் அவதி!

மட்டக்களப்பு பூநொச்சிமுனை பாலம் திருத்தப்படாமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த உள் வீதியினூடாக சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இலகுவாக பஸ்களில் செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருந்த பாதையாகவும் இது கருதப்படுகிறது.

இது தவிர, இப்பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் இலகுவாக நகர பாடசாலைகளுக்கு செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாலம் இடிந்து நொறுங்கி சுமார் இரண்டு வருட காலத்தைக் கடந்து இருக்கின்ற போதிலும் இந்தப் பிரதேசத்துக்கு வருகை தந்த அரசியல்வாதிகளோ அரசியல் அதிகாரம் படைத்தவர்கள் எவரும் இதனைத் திருத்த கவனம் செலுத்தவில்லை என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாதை முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளதால் தமது கருமங்களை முடித்துக் கொள்வதற்காக அதிக பணம் செலவு செய்து நீண்ட பாதை ஊடாக பயணிக்க வேண்டி இருப்பதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதி வறிய மக்களின் பிரதான பாதையாக கருதப்படுகின்ற இந்தப் பாதையின் பாலத்தை திருத்தம் செய்து தருவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்தப்பாலத்தின்திருத்த வேலைபிரதேசமக்களுக்கு அத்தியாவசிய தேவையாகக் கருதப்படுவதால் விரைவாக இந்தப் பாலத்தை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கிழக்குமாகாண ஆளுநர் அனுராத யகம்பத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பன்னாட்டு செலாவணி நிதியக் கடனால் மக்களுக்கு கிடைப்பது எதுவுமில்லை

**குதிரைக்கு முன்னால் கரட்டைக் கட்டிவிட்டு அதன் சிந்தனைகளை அந்தக் கரட்டின் மீது ஒருமுகப்படுத்தி அதனை ஓடவிடுவது போன்று பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் கடன் மீது முழுக் கவனத்தையும் ஒருமுகப்படுத்தி ஓடிக் கொண்டிருந்தது இலங்கை. இப்போது அது கிடைத்துவிட்டது. திங்கட்கிழமை இலங்கை நேரப்படி இரவு 2.9 பில்லியன் டொலர் கடனை வழங்குவதற்கான சம்பிரதாயபூர்வ அனுமதியை நிதியத்தின் நிறைவேற்றுநர்கள் சபை வழங்கியது.**

**இலங்கை தற்போது எதிர்கொண்டுவரும் பொருளாதார நெருக்கடியில் இருந்து அதனைப் பிணை எடுப்பதற்கான மிக முக்கிய ஆதாரமாக பன்னாட்டுச் செலாவணி நீதியத்தின் இந்தக் கடன் பார்க்கப்பட்டது. அது கிடைத்ததை அடுத்து இலங்கைக்கு 7 பில்லியன் வரையான கடன்கள் கிடைக்கும் என்று தனது செய்தியில் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

**ஆக மொத்தத்தில் ஏற்கனவே பெற்ற கடன்களை அடைக்கமுடியாது முறிந்துபோன நிலையில் இருந்து மீண்டு வந்து இயல்பு நிலைக்குத் திரும்பவே மேலும் பெரும் தொகைக் கடன்களையே ஆட்சியாளர்கள் பெறவுள்ளனர் என்பது தெளிவு. அது தவிர அவர்களுக்கு வேறு வழி ஏதும் தெரிந்திருக்கவில்லை.**

**ஏற்கனவே உள்ள கடன், அதனை அடைப்பதற்காக மீண்டும் பெறப்படும் கடன் என்று எல்லாவற்றையும் சேர்த்து வருங்காலத்தில் இலங்கை மக்கள்தான் கட்டியாகவேண்டும். ஆட்சியாளர்கள் கடன்களைப் பெற்று தாங்கள் சொகுசு வாழ்க்கையை அனுபவித்துக்கொள்வார்கள். ஆனால் கடனைக் கட்ட மாய்ந்து மாய்ந்து உழைக்கவேண்டியவர்கள் அப்பாவிப் பொது மக்களே. அவர்களிடமிருந்து வரிகள் மூலம் பணத்தை வறுகித்தான் ஆட்சியாளர்கள் கடனைத் திருப்பிக் கட்டப் போகிறார்கள். அதனால் இனிவரும் காலங்களில் பொருள்களின் விலைகள் பழைய நிலைக்குத் திரும்பும் என்றோ வரி மற்றும் வங்கிக் கடன் வட்டிகள் பழைய மாதிரியே குறையும் என்றோ எதிர்பார்க்க முடியாது.**

**அரசு இரண்டு விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியதாக உள்ளது. ஒன்று கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஏற்ற வகையில் அரசின் வருமானத்தைப் பெருக்குவது. அடுத்தது ஆட்சியாளர்கள் அடுத்த தேர்தலை எதிர்கொள்ளத்தக்க வகையில் மக்களுக்கு அபிவிருத்தியைக் காட்டவேண்டிய நிர்ப்பந்தத்திற்காகச் செலவிடவேண்டியிருப்பது.**

**வருமானத்தைப் பெருக்க உற்பத்தி சார்ந்த எந்தவொரு திட்டமும் அரசிடம் இல்லாத நிலையில், வரி அதிகரிப்பும் அரச செலவுகளைக் குறைப்பதும் அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதுமே ஆட்சியாளர்களிடம் உள்ள ஒரே வழி. இவை நிகழும்போது வாழ்க்கைச் செலவு உயர்வதைத் தடுக்க முடியாது. பொருள்களின் விலையேற்றத்தையும் இறக்க முடியாது. அபிவிருத்திக்கான நிதியையும் மக்களிடமிருந்தே நேரடியாகவோ மறைமுகமாகவோ வறுக வேண்டியிருக்கும்.**

**அப்படியிருக்கும்போது செலாவணி நிதியக் கடனால் மக்களுக்குக் கிடைக்கப் போகும் நிவாரணம் என்பது எதுவுமே இல்லை என்பதுதான் யதார்த்தம்.**

# முதலில் ஜனாதிபதித் தேர்தல் பின்னர் ஏனைய தேர்தல்கள்

## அதுவே ரணிலின் திட்டம் என்கிறார் சுரேஸ்



2024 ஆம் ஆண்டில் முதலில் ஜனாதிபதி தேர்தலை நடத்திய பின்னர் ஏனைய தேர்தல்களை நடத்துவதற்கே ஜனாதிபதி முயற்சித்து வருகிறார் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தொடர்ந்து ஒத்திவைக்கப்படுகின்ற தேர்தல் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களை கொண்டு சபைகளை நடத்துவதற்கு பொதுஜன பெரமுன முயற்சிக்கிறது. இது சட்டவிரோதமானது.

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்படும் போது தவிசாளர்களின் பதவிகளும் இழக்கப்படும். அவ்வாறு பதவிகளை இழந்த பின்னர் தவிசாளர்களைக் கொண்டு சபைகளை இயக்க முடியாது.

தேர்தல்கள் தேவையில்லை என்றும் ஆனால் சபைகளின் தவிசாளர்கள் தொடர்ந்து செயற்படலாம் என பொதுஜன பெரமுன குறிப்பிடுகின்றமை ஜனநாயக விரோதமான செயற்பாடு. – என்றார்.

# முதலாளியின் வங்கி அட்டையில் இருந்து 50 லட்சம் ரூபா பிலியந்தலையில் மோசடி

## பணிப்பெண் கைது; மகள், மருமகனும் சிக்கினர்

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஓய்வுபெற்ற வங்கி அதிகாரியின் ஏ.ரி.எம் அட்டையிலிருந்து சுமார் 50 லட்சம் ரூபாவை மீளப் பெற்றுக் கொண்ட சம்பவம் பணிப்பெண் உட்பட மூவரைக் கைது செய்துள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பணிப்பெண்ணின் மகள் மற்றும் மருமகனும் உள்ளடங்குகின்றனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

11 வருடங்களாக வீட்டில் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்த குறித்த பெண்ணிடம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த முன்னாள் வங்கி அதிகாரி தனது பணத் தேவையின் பொருட்டு தனது ஏரிஎம் அட்டை மற்றும் அதன் பின் இலக்கத்தை கொடுத்து நோய்க்கான சிகிச்சைக்கு பணத்தை எடுத்துச் செலவிடுமாறு தெரிவித்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஓய்வு பெற்ற வங்கி அதிகாரி, குணமடைந்து வீட்டுக்கு வந்த பின்னர் தனது வங்கி அட்டை மூலம் 50 லட்சம் ரூபா பணம் எடுக்கப்பட்டிருப்பது தெரிய வந்தமையையடுத்து பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

தனது வங்கிக் கணக்கில் ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் இருந்ததாகவும், இரண்டு பிள்ளைகளுக்கும் தலா 50 லட்சம் ரூபாவை கொடுத்து மீதிப் பணத்தை வங்கியில் வைப்பிலிட்டதாகவும் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணையில், சந்தேக நபர், வங்கியின் முன்னாள் அதிகாரியின் ஏரிஎம் அட்டையைப் பணன்படுத்தி ஆறு மாதங்களாக பணம் எடுத்தமை தெரிய வந்துள்ளதாகவும் அந்த பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் கைதான 6 இலங்கை மீனவர்கள்



இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்த சமயம் இந்தியக் கடற்படையினரால் 6 இலங்கை மீனவர்கள் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களின் படம் இது.

# ஐ.தே.கவுக்குப் புதிய யாப்பு

## மக்களிடமிருந்து யோசனை பெறவும் திட்டம்


ஐக்கியதேசியக்கட்சிக்குப் புதிய யாப்பு ஒன்றைத் தயாரிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளைப் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கான புதிய யாப்பைச் சட்டமூலமாக்குவதற்கு கட்சியின் நிறைவேற்றுச் சபையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்தக் குழுவின் பரிந்துரைக்கமையவே புதிய யாப்புக்கான பொதுமக்களின் கருத்துக்களும் யோசனைகளும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி குழுவின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பனவும், செயலாளராக ஜனாதிபதி சட்டத்தரணி நிஸ்ஸங்க நாணயக்காரவும், ஏனைய அங்கத்தவர்களாக ஜனாதிபதி சட்டத்தரணிகளான தயா பெல்பொல மற்றும் ரோலண்ட் பெரேரா ஆகியோரும் செயற்படுகின்றனர். அதற்கிணங்க புதிய யாப்பு சட்டமூலத்தை தயாரிப்பதற்காக கருத்துக்கள் மற்றும் யோசனைகளைப் பெற்றுத்தருமாறு கட்சியானது அனைத்து செயற்குழுவின் அங்கத்தவர்களுக்கும், மாவட்டத்தலைவர்கள் மற்றும் அதிகாரம் கொண்ட பிரதிநிதிகளுக்கும், கட்சியின் அமைப்பாளர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

புதிய யாப்பு தயாரிப்பைத் தொடர்ந்து கருத்துக்கள் மற்றும் யோசனைகளை மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்பதாக கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவின் சட்டப்பிரிவில் ஒப்படைக்குமாறும் குழுவின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸ்ஸங்க நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# தடையுத்தரவு நீடிப்பு



மேல்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்காக விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நீடிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

குறித்த ரிட் மனு நேற்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிசங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்த போது அங்கிருந்த சுமார் ஒரு கோடியே எழுபத்தெட்டு லட்சம் ரூபா பணம் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக கோட்டை நீதிவான் நீதிமன்றில் இது தொடர்பான முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

# தாய் பால்கொடுக்க மறுத்ததே குழந்தை இறப்புக்கு காரணம்

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் பச்சிளங் குழந்தை போசாக்கின்மையால் உயிரிழந்த விவகாரத்தில், பெற்றோரின் பொறுப்பற்ற தன்மையே காரணமென யாழ்.மாவட்டச்செயலர் தெரிவித்தார்.

தாயார் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், குழந்தைக்கு பாலூட்ட மறுத்தார் எனவும், மாதாந்த கிளினிக்கிற்கு செல்ல மறுத்தார் எனவும் தெரிவித்துள்ளார்.

குழந்தையின் தந்தை மதுபோதைக்கு அடிமையானவர் என்றும், குழந்தை உணவூட்டப்படாமல் உயிரிழந்ததாக தெரிவித்தார்.

# 5 வயது சிறுவன் யாழ்ப்பாணத்தில் அநியாய சாவு

பெற்றோரின் அதீத மத நம்பிக்கை காரணமாக புற்றுநோய்க்கு உரிய சிகிச்சைகள் வழங்கப்படாமையால் 5 வயது சிறுவன் உயிரிழந்துள்ளான்.

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது –

அந்தப் பகுதியைச் சேர்ந்த 5 வயது சிறுவனுக்கு இரத்த புற்றுநோய் கடந்த வருடம் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கான சிகிச்சைகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டன.

அந்நிலையில், பெற்றோர் கோப்பாய் பகுதியில் உள்ள மத வழிபாட்டு இடத்துக்குச் சென்று தமது பிள்ளைக்காக பிரார்த்தனை செய்தனர்.

அதன் போது அங்கிருந்தவர்கள், வைத்தியத்தால் பிள்ளையைக் குணமாக்க முடியாது எம்மிடம் அழைத்து வாருங்கள் பிரார்த்தனைகள் மூலம் குழந்தையைக் குணமாக்கலாம் என பெற்றோருக்கு நம்பிக்கையூட்டியுள்ளனர்.

அதனை அடுத்து பெற்றோர் தமது பிள்ளையை சிகிச்சைக்காக இந்தியாவிற்கு அழைத்து செல்லபோவதாக யாழ்.போதனா வைத்தியசாலையில் பொய் கூறிவிட்டு, பிள்ளைக்கு எந்தவித சிகிச்சையும் அளிக்காது, மத வழிபாட்டு தலத்துக்கு அழைத்து சென்று பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வந்தனர்.

ஒரு வருட காலத்துக்குப் பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிறுவனுக்கு நோயின் தன்மை தீவிரமாகி வயிறு வீங்கி உணவு உண்பதைக் குறைத்துள்ளான். அந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சிறுவன் உயிரிழந்துள்ளான்.

காலைக்கதிர்
Kalaikkathir

# கொக்குத் தொடுவாயில் தமிழர் நிலங்களில் முன்னறிவிப்பின்றி எல்லைக்கல் இடும் பணி

## கமக்கார அமைப்பினர் விசனம்; முறைப்பாடு

கொக்குத்தொடுவாய் தமிழர் வயல்நிலங்களில் முன்னறிவிப்பின்றி எல்லைக்கல் நாட்டும் பணி தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக விவசாயிகள் முறையிடுகின்றனர்.

தமது பூர்வீக வயல் நிலங்களில், எவ்வித முன்னறிவிப்புமின்றி அரசதிணைக்களத்ததைச் சார்ந்த சிலரால் எல்லைக்கற்கள் நாட்டு வருகின்றனர் என்று கொக்குத் தொடுவாய் கமக்கார அமைப்பினர் தெரிவித்தனர்.

கொக்குத்தொடுவாய் – கோட்டக்கேணியிலிருந்து, அம்பட்டன் வாய்க்கால், தீமுந்தல், பணம்போட்டகேணி, நாயடிச்சமுறிப்பு, வெள்ளைக்கல்லடி, சிவந்தாமுறிப்பு, சூரியனாறுவரையான தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக வயல் நிலங்களில் அரச திணைக்களத்தைச் சார்ந்த சிலரால் எல்லைக்கற்கள் நாட்டப்பட்டு வருகின்றது.

இந்த நடவடிக்கை குறித்துக் காணிகளுக்குரிய தமிழ்மக்களுக்கோ, கமக்கார அமைப்பினருக்கோ அறிவித்தல் வழங்கப்படவில்லை.

இவ்வாறக மக்களுக்கு அறிவித்தல் வழங்காமல் எல்லைக்கல் நாட்டும் செயற்பாடொன்று, ஏற்கனவே கடந்தவருட இறுதிப் பகுதியிலும் நடந்தது.

அப்போது இது தொடர்பில் உரிய அரச அதிகாரிகள் மற்றும், வெலி ஓயா பகுதி நிலஅளவைத் திணைக்களத்தினருக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அங்கு நாட்டப்பட்ட எல்லைக் கற்கற்றப்பட்டன.

இனிமேல் இவ்வாறான எல்லைக்கல் நடும் பணி நடப்பதாக இருந்தால் காணிகளுக்குரிய மக்களுக்கும், கமக்கார அமைப்பினருக்கும், மாவட்டசெயலர் மற்றும், பிரதேசசெயலர் ஆகியோருக்கு கட்டாயம் அறிவித்தல் வழங்குவோம் என்று எல்லைக்கல் நாட்டும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் உறுதியளித்திருந்தனர்.

எனினும் தற்போது மீண்டும் எவ்வித முன்னறிவிப்புமின்றி தமிழ்மக்களுக்குரிய வயல்காணிகளில் எல்லைக் கற்கள் நாட்டும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன – என்று கமக்கார அமைப்பினர் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து அவர்கள் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரனுக்கும் தெரியப்படுத்தியைத் தொடர்ந்து அவர் அங்கு நேரில் சென்று பார்வையிட்டார். எல்லைக்கற்கள் நடப்பட்டுள்ளன என்பதை அவர் உறுதி செய்தார். இது தொடர்பில் உரியவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்து நடவடிக்கை எடுப்பார் என்றும் கமக்கார அமைப்பினருக்கு உறுதியளித்துள்ளார்.

இந்த அத்துமீறல் தொடர்பில் மாவட்டசெயலர் மற்றும், பிரதேசசெயலர் ஆகியோரது கவனத்திற்கும் தாம் கொண்டுவரவுள்ளனர் என்று கொக்குத்தொடுவாய் பகுதி தமிழ் மக்கள் தெரிவித்தனர்.

# விசாரணைக்குச் சென்ற பொலிஸார் மீது தாக்கு

## இருவர் படுகாயம்; மட்டக்களப்பில் சம்பவம்

விசாரணைக்குச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது நடத்தப்பட்ட பாரிய தாக்குதல் சம்பவத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உட்பட இரு பொலிஸார் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனக் காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ்.ஏ. றஹீம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக செய்யப்பட்ட முறைப்பாட்டை விசாரணை செய்யச் சென்ற பொலிஸார் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலை நடத்தியவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் புலனாய்வு பிரிவு உறுப்பினர் ஒருவர் எனத் தெரியவருகிறது. இவரிடமிருந்து கிரனைட் குண்டு ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர். சம்பவத்தின் போது அவர் மது போதையிலிருந்தார் எனத் தெரிய வருகிறது.

படுகாயமடைந்த பொலிஸ் சார்ஜன் சுபசிங்க மற்றும் பொலிஸ் உத்தியோகத்தரான புஸ்பகுமார ஆகியோர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# கால்வாயில் பாய்ந்த மோ.சைக்கிள் விபத்தில் 15 வயது மாணவன் சாவு

மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல் – கல்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மூவர் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து கால்வாயில் வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மூவரும் கல்கமுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் 15 வயதுடைய பாடசாலை மாணவன் உயிரிழந்துள்ளார்.

சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத குறித்த மாணவன் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவர் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பணம் கொடுத்து ஏமாந்த முதியவர் உயிர்மாய்ப்பு

## யாழில் சம்பவம்

மகன் அனுப்பிய பணத்தை நம்பிக்கை அடிப்படையில் பெண்ணொருவருக்கு கொடுத்து ஏமாந்த முதியவர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் வசிக்கும் முதியவர் ஒருவருக்கு, வெளிநாட்டில் உள்ள மகன் கட்டம் கட்டமாக சுமார் ஒரு கோடி ரூபா பணத்தை வழங்கி, யாழ்ப்பாணத்தில் காணி வாங்கி வீடு கட்டுமாறு கூறியுள்ளார்.

மகனின் பணத்தைப் பெற்றவர் காணி வாங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்ட போதிலும், எதிர்பார்த்த காணி கிடைக்காமையால், காணி வாங்குவதனை பிற்போட்டுள்ளார்.

அந்நேரம் அவருக்கு அறிமுகமான பெண்ணொருவர் தனது தேவைக்கு என முதியவரிடம் இருந்து பணத்தைப் பெற்றுள்ளார். முதியவரும் நம்பிக்கை அடிப்படையில், மகனுக்கு தெரியாமல் பணத்தை வழங்கியுள்ளார்.

பணத்தை பெற்றுக்கொண்ட பெண், பணத்தைத் திருப்பி கொடுக்காதமையால், முதியவர் ஏமாந்த நிலையில், மகனும் காணியை வாங்குமாறு வற்புறுத்தி வந்த நிலையில் கடும் மன உளைச்சலுக்கு உள்ளான முதியவர் தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துள்ளார்.

# நீரில் மூழ்கிய சிறுவன் இறப்பு

சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் காலி – தலாபிட்டிய பகுதியில் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள தடாகம் ஒன்றில் நீராடிக்கொண்டிருந்த வேளையிலேயே நீரில் மூழ்கி சிறுவன் உயிரிழந்துள்ளார்.

10 வயதுடைய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுவனின் சடலம் காலி – கராப்பிட்டிய வைத்தியசாலையில் உடற்கூற்று பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

# உணவுப் பாதுகாப்பு நிலை கரிசனைக்குரிய ஒன்றே

## உலக வங்கி கூறுகிறது

இலங்கையின் பொருளாதார நிலையும் உணவு பாதுகாப்பும் தொடர்ந்தும் கரிசனைக்குரிய விடயமாக உள்ளது என உலக உணவுதிட்டம் தெரிவித்துள்ளது.

2023 பெப்ரவரி மாதத்துக்கான உணவு பாதுகாப்பு நிலை தொடர்பான ஆய்வில் 32 வீதமான குடும்பங்கள் உணவு பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றமை தெரியவந்துள்ளதாக உலக உணவு திட்டம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் சந்தைகளில் விலைகள் தளம்பல் நிலையில் காணப்பட்டன எனத் தெரிவித்துள்ள உலக உணவு திட்டம் எனினும் சந்தைகள் தொடர்ந்தும் இயங்குகின்றன பல தரப்பட்ட பொருள்கள் காணப்படுகின்றன எனவும் தெரிவித்துள்ளது.

## வைத்தியசாலை தாதியர் விடுதியில்

# பெண்கள் உள்ளாடைகளை திருடியவர் மடக்கிப் பிடிப்பு

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தாதியர்கள் விடுதிக்குள் புகுந்து அவர்களின் உள்ளாடைகளை திருடிய சந்தேகத்தில் வைத்தியசாலை ஊழியர் ஒருவரை பாதுகாப்பு அதிகாரிகள் பிடித்து மருதானை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபரை பிடிக்கும் போது அவரிடம் மூன்று உள்ளாடைகள் இருந்தன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சமீபகாலமாக, பெண்கள் விடுதியில் பெண்களின் உள்ளாடைகள் திடீர் திடீரென காணாமல்போவது தொடர்பாகத் தாதியர்கள் பாதுகாப்பு பிரிவினருக்கு முறைப்பாடு செய்திருந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை, வழக்கம் போல் விடுதிக்குள் நுழைந்த சந்தேக நபர், அங்கு காணப்பட்ட உள்ளாடைகளை திருடியபோது பிடிபட்டுள்ளார்.

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சந்தேக நபர் களுத்துறையைச் சேர்ந்த 37 வயதுடைய சுகாதார உதவியாளராகப் பணிபுரிபவராவார்.

சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், மருதானை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுற்றுலா கருத்தரங்கு





இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கான நிலைபேறான சுற்றுலா சான்றுபடுத்தலிற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுக்கும் முகமாக விசேட கருத்தமர்வு ஒன்று வட மாகாண சுற்றுலா பணியகத்தின் ஒழுங்கமைப்பில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை ஒவ்வொரு மாகாணத்திலும் குறித்த செயற்திட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில் வட மாகாணத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களை சுற்றுலாத்துறை சார்ந்து நிலைபேறான சர்வதேச சான்றிதழை பெற்றுகொடுப்பதே குறித்த கருத்தரங்கின் நோக்கமாக கொண்டுள்ளது.

இதன்பொழுது இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் உபாலிரத்நாயக்க, வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன், வடமாகாண சுற்றுலா பணியக பணிப்பாளர் கிரேத்குமார், வட மாகாண சுற்றுலா பணியக உத்தியோகத்தர்கள், வட மாகாண சிறிய மற்றும் நடுத்தர முயற்ச்சியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



# ஜனாதிபதியினது அதிகாரமா? மக்களின் ஜனநாயக உரிமையா?

## பலப்பரீட்சை நடக்கிறது என்கிறார் சிறீநேசன்





(அகீல்)

மக்களாணை பெறாத ஜனாதிபதியின் அதிகாரத்திற்கும், மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கும் இடையே தற்போது பலப்பரீட்சை நடைபெறுகின்றது.என்றுமட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்ஜி.ஶ்ரீநேசன்தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலை குறித்து செய்தியாளர்களிடம் பேசும் போது அவர் இந்தக் கருத்தை தெரிவித்தார்.

வரிச்சுமை,மின்சாரக்கட்டணஉயர்வு, வருவாய்க் குறைவு என்பவற்றுக்கு எதிராக மக்கள் ஜனநாயக ரீதியாக வீதிக்கிறங்கி போராடுகின்றனர். ஆனால் ஆட்சியாளர்கள் அதற்குச் செவி சாய்ப்பதாகவில்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தடுப்பதிலும் ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி வருகின்றார். சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நிதியமைச்சர் என்ற அதிகாரத்தினால் ஜனாதிபதி கட்டி வைத்துள்ளா.

இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சிகள்மக்களுடன்வீதிக்குஇறங்கிப் போராடி வருகின்றனர். ஜனநாயக ரீதியாக வன்முறைகள் இல்லாமல் போராட்டங்கள் நடைபெறுகின்றன. ஆனால் ஜனாதிபதி தனது மாமனாரான ஜெயவர்தனாவைப்போன்று அதிகார இரும்புக்கரம் கொண்டு போராட்டங்களை ஒடுக்கிவருகின்றார்.

ஆர்ப்பாட்டங்களின் போது இரண்டு மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான காரணங்கள் என்னவென்று தெரியவில்லை. ஆனால், காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகள் போராட்டத்தின்போது பொலிசாரால் தாராளமாகப்பிரயோகிக்கப்பட்டுள்ளன. அவை இருவரின் உயிர்களை பறித்துள்ளதாக கூறப்படுகிறது.

சட்டபூர்வமான அரச பொலிசார்,எவ்வாறு சட்டபூர்வமற்ற காலாவதியான கண்ணீர்ப்புகையைப் பயன்படுத்தினார்கள் என்ற கேள்வி எழுகின்றது. மேலும், இராணுவச் சீருடை அணிந்தவர்கள் இரும்புக் கம்பிகள் அல்லது தடிகளோடு வந்திருப்பதை புகைப்படங்கள் காட்டுகின்றன.அவர்கள் இராணுவத்தினர் அல்லர் என்று அரச தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.அப்படியாயின்,இராணுவ சீருடையில் குண்டர் படையொன்றை களத்தில் இறக்கிய அதிகாரக் குண்டர் யார் என்ற கேள்வி எழுகின்றது.

ஜனாதிபதி ரணில் மக்களாணை அற்றவராக இருந்தாலும், மக்களின் போராட்ட உரிமைகளை ஒடுக்குவதற்கு நிறைவேற்றுத்துறை அதிகாரத்தை உச்சமாகப் பயன்படுத்துகின்றார். அதிகாரங்கள் ஆட்சியாளர்களுக்கு இனிப்பாக இருக்கலாம். ஆனால்,மக்களுக்கு கசப்பாகவே இருக்கின்றது.மக்களுக்கு கசந்தால் மக்களுக்கான ஆட்சியென்ற ஜனநாயகத்தின் அர்த்தம் பொய்யாகிவிடும்.

அபிப்பிராய வாக்கெடுப்பு ஆய்வொன்றின்படி ஏறத்தாழ 85 சதவீத மக்கள் ஆளும் கட்சியினரான ரணில்,ராஜபக்சதரப்பினரைநிராகரிக்க முற்பட்டுள்ளனர்.இதனால்தேர்தலையும் மக்களையும் கண்டு ஆட்சியாளர்கள் அச்சமடைகின்றார்கள். இதுதான் உள்ளூராட்சித் தேர்தலை தவிர்ப்பதற்கான முதன்மைக் காரணமாகும்.

இத்தாலிய நாட்டின் சர்வாதிகாரி முசொலினி தேர்தல் மூலமாகவே ஆட்சிக்கு வந்தார். பின்னர் தேர்தலை இல்லாமலாக்கி நாட்டின் சர்வாதிகாரியானார்.

நாட்டின் பொருளாதாரப் பின்னடைவைக் காரணம் காட்டியே முசோலினி தேர்தல்களைத் நிறுத்திய பின்னர் சர்வாதிகாரியானார்.

ரணில்தேர்தல்இல்லாமலேஜனாதிபதியானவர் என்பதை நாமறிவோம். இதனால் ஜனாதிபதி மக்களையும் தேர்தலையும் கண்டு இரட்டை அச்சம் அடைகிறார், கூடவே ஆத்திரமும் கொள்கிறார் என்று உளவியல் ரீதியாக எண்ணத் தோன்றுகிறது.

அதிசக்திவாய்ந்த வல்லரசு பக்கமாக ஜனாதிபதி ரணில் சாய்ந்தமையால் தான் அதீத சக்தி பெற்றதாக நினைக்கிறாரோ தெரியவில்லை.

அரசனை நம்பி புருசனைக் கைவிட்ட கதையாக, ஜனாதிபதி மக்களைக் கைவிட்ட கதையாகவும் இது மாறக்கூடும். தனிமனித ஜனாதிபதியின் அதிகாரம் வெல்லுமா? மக்களின் ஜனநாயக உரிமை வெல்லுமா? என்பதற்கு விரைவில் மக்கள் சக்தியே பதிலளிக்கும்.

அதிகாரத்தில் மிதந்த பலர் வரலாற்றில் காணாமல் போனதை

# கண்டனம்

(அகீல்)

பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்திற்குள் மாணவர்கள் கட்டிப்பிடிப்பதற்குத் தடையில்லை என்ற உப வேந்தரின் அறிக்கையை ஐக்கிய காங்கிரஸ் கட்சி வன்மையாக கண்டித்துள்ளது.

இது பற்றி ஐக்கிய காங்கிரஸ் கட்சியின் கொள்கை பரப்புச்செயலாளர் ஸப்வான் சல்மான் தெரிவித்ததாவது:

காதலிப்பதும் கட்டிப்பிடிப்பதும் தடையல்ல என்ற கருத்து ஒழுக்கமாக வாழ நினைக்கும் இளைஞர் யுவதிகளுக்கு மத்தியில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் மத, கலாசசார விழுமியங்களை கொண்ட நமது நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும்.

எனவேஒழுக்கக்கேடான இது போன்ற செயற்பாடுகள் முழுமையாக தடைசெய்யப் பட வேண்டும்.

கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு மத்தியில் ஒழுக்கக்கேட்டை ஊக்குவிக்கும் செயற்பாடாகவே இவ் அறிவிப்பை நாம் பார்க்க முடிகிறது.

அத்துடன், பல்கலைக் கழகத்தில் கற்கும் தமது பிள்ளைகளை சகோதர சகோதரிகளை பார்வையிடச் செல்வோருக்கு இந்த அறிக்கை பெரும் சிக்கலையும் சங்கடத்தையும் ஏற்படுத்துகிறது.

இதுபோன்ற தீய செயல்கள் அனைத்து மாணவர்களையும் கெட்டவர்களாக, ஒழுக்கமற்றவர்களாகச் சித்தரிக்கிறது.

அதேபோன்று காதலின் பெயரால் ஒவ்வொரு மரத்தடியிலும் சோடி சோடியாக இருந்து பகிரங்கமாக லீலைகளில் ஈடுபடுவதை பார்க்கும் பெண் பிள்ளைகளின் பெற்றோர் தங்களது பிள்ளைகளின் கல்வியை இடைநிறுத்தவாய்ப்புள்ளது. இதுபோன்ற இழிவான செயற்பாடுகளால்பலதிறமையான மாணவ மாணவிகளின் கல்வி நடவடிக்கைகளுக்கு தடவையாகவும் அமையும்.

கல்வி கற்கத் செல்லும் இடத்தில் ஒழுக்கக்கேடான செயலைத் தூண்டும் உப



வேந்தரின் கருத்தை நாம் வன்மையாககண்டிப்பதுடன் இது போன்ற அநாகரிக செயற்பாடுகளை கல்லூரிகளில் முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தை வலியுறுத்துவதோடு பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் ஒழுக்கத்தையும் நாகரீக பயன்பாடுகளையும் போதிக்கும் கருத்தரங்குகளை நடத்தி சமூகத்தில் நல்ல பிரஜைகளாக பிரகாசிக்க வழிவகுக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.03.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 05

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 06 திங்கட்கிழமை 20.03.2023 கதிர் 03

# சூட்டுக் காயத்துடன் இளைஞரின் சடலம்

## கந்தேவத்தவில் சம்பவம்

துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொத்துஹெர – கந்தேவத்த பிரதேசத்தில் இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கஹவத்த – பனாபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

2



# கார் விபத்தில் ஆசிரியரான இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

கார் ஒன்று 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் பசறை 13 ஆம் கட்டை பகுதியில் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

34 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சாவடைந்துள்ளார்.

ஹொப்டன் கலைமகள் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றும் இவர், பாடசாலைக்குச் செல்லத் தயாராகி, தனது காரை வீட்டிலிருந்து வெளியே எடுத்த வேளையே விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் தற்போது பசறை வைத்தியசாலையின் பிரேத அறையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.


மேலதிக விசாரணைகளைப் பசறை பொலி–ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

2

## அடுத்த காவல் மா அதிபர் பதவிக்கு

# தேசபந்துவின் பெயரை நிராகரித்தார் ரணில்

## விக்கிரமரட்ணவுக்கு பதவி நீடிக்க வாய்ப்பு



புதிய காவல் மா அதிபராக மூத்த பிரதி காவல் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை நியமிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ் செய்த பரிந்துரையை அரசதலைவர்ரணில்விக்கிரமசிங்க நிராகரித்துவிட்டார் என்றுஅவருக்குநெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான வரான தென்னக்கோனை அடுத்த காவல் மா அதிபராக நியமிக்கப் அரச தலைவர் பரிந்துரைத்திருக் கிறார் என்று செய்திகள் வெளியானதைத்

2

# மக்கள் ஆதரவு ஊடாகவே மீளவும் மஹிந்தவைப் பிரதமராக்குவராம்



மக்கள் ஆதரவுமூலமே மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக்குவோம் என்றுஸ்ரீலங்கா பொதுஜனபெரமுனகட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மேலும் கூறியதாவது:–

மஹிந்த ராஜபக்சவைப் பிரதமராக்க வேண்டுமென் றால் அதனை எம்மால் இலகுவில் செய்துவிட முடியும். ஆனால், அவ்வாறான எந்தவொரு முயற்சியும் தற்போது இடம்பெறவில்லை. தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்த்தன எம்முடன் ஒத்துழைப்புடன் செயற்படுகின்றார்.

அவருடன் எமக்கு எவ்வித பிரச்சி னையும் இல்லை.

ஜனாதிபதி, பிரதமர் பதவி ஆசையில் திரியும் ஒரு சிலரே இப்படியான வதந்திகளைப் பரப்பி வருகின்றனர். மக்கள் ஆதரவு மூலமே மஹிந்தவைப் பிரதமராக்குவோம் – என்றார்.

# மலையகத்தில் மண்சரிவு நாற்பது வீடுகள் பாதிப்பு

## எழுவர் காயம்; 220 பேர் நிர்க்கதி



பண்டாரவளை, பூனாகலை – கபரகலைப் பகுதியில் நேற்றிரவு ஏற்பட்ட மண்சரிவால் நான்கு லயன் குடியிருப்புகள் பகுதியிளவில் சேதமடைந்துள்ளன. 62 குடும்பங்களைச் சேர்ந்த 220 இற்கும் மேற்பட்டோர் பூனாகலை இலக்கம் -03 தமிழ் வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தத்தில் சிக்கிக் காயமடைந்த 7 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

2

## இலங்கைக்கு

# கடத்தப்படவிருந்த ‘கொக்கைன்’ இராமேஸ்வரத்தில் மாட்டியது

## ரூபாய் 1 கோடி பெறுமதியானது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.20

இலங்கைக்குக் கடத்தப்பட இருந்ததாகக் கூறப்படும் 10 மில்லியன் ரூபாய் பெறுமதியிலான கொக்கைன் போதைப் பொருள் தமிழ் நாடு இராமேஸ் வரம் பகுதியில் பொலிசாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. இராமேஸ்வரம தொணடிப் பகுதியில் இருந்து கடல் வழியாக கடத்தும் நோக்கில் இலங்கை கொழும்பைச் சேர்ந்த ஒருவரால் இந்த கொக்கைன் எடுத்து–வரப்பட்டதாக தமிழ் நாடு பொலிஸார் தெரி விக்கின்றனர்.

கைப்பற்றப்பட்ட கொக்கேன் இந்திய நாணயதத்ல 2 லட்சம் ஆயிரம் ரூபாய் மதிப்பிலானது என்றும் அவர்கள் தெரிவித் தனர்.

கொக்கேன் போதைப் பொருளுடன் கைதான இலங்கையர் 2019ஆம் ஆண்டு முதல் இந்துயாவில் தங்கிருப்பவர் என்கின் றனர் தமிழ்நாடு பொலிஸார்.

# மண்சரிவுப் பாதிப்புக்களுக்கு தோட்ட நிர்வாகமே பொறுப்பு

## அமைச்சர் ஜீவன் குற்றச்சாட்டு

பண்டாரவளை, பூனாகலை – கபரகல தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவால்பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் தோட்ட நிர்வாகமே பொறுப்புக்கூற வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும்அமைச்சருமான ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டினார்.

மீரியபெத்தையில் மண்சரிவு ஏற்பட்ட பின்னர், பதுளைப்

2



# ஆணையாளர்கள், செயலாளர்களின் வசமாகின 340 உள்ளூராட்சி சபைகள்

340 உள்ளூராட்சி சபைகளின் அதிகார காலம் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளது.

இதன்படி, அந்த நிறுவனங்களின் மாநகர மேயர், நகர முதல்வர்கள், தவிசாளர்கள் உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டுள்ள அரச வாகனங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் அதிகாரம் ஆணையாளர் அல்லது செயலாளர்களுக்குஉரித்தாக்கப்பட்டுள்ளது என்று மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு 4 வருடங்களுக்கான அதிகாரம் அதே ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம்திகதிவழங்கப்பட்டது.

இதற்கமைய, கடந்த வருடத்துடன் குறித்த 4 வருட அதிகார காலம் நிறைவடைந்தது. எனினும், விடயத்துடன் தொடர்புடைய அமைச்சருக்குள்ள அதிகாரத்துக்கு அமைய, உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார காலம் மேலும் ஒருவருடத்துக்கு நீடிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், எல்பிட்டிய பிரதேச சபையின் தேர்தல் மாத்திரம் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடத்தப்பட்ட நிலையில், அதன் அதிகார காலம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நிறைவடையவுள்ளது.

இந்த நிலையில், நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்த 340 உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களின் பதவிக் காலத்தை நீடிப்பதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் சட்டமா அதிபரின் நிலைப்பாட்டைஅறியஅரசுஅண்மையில் நடவடிக்கை எடுத்திருந் தது.

இதற்கமைய, சட்டமா அதிபரின் நிலைப்பாடு இன்று அல்லது நாளை தமக்குக் கிடைக்கப்பெறும் என்று

2



# பல பகுதிகளில் பலத்த மழை

நாட்டின் பல பகுதிகளில் இன்று காலை முதல் இரவு வரை இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று வளிமண்டலவியல்திணைக்களம்தெரிவித்துள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும், நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை முதல் மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு, சப்ரகமுவ, மத்திய, ஊவா, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மேலும் சில இடங்களிலும் 50 மில்லிமீற்றருக்கு மேல் கனமழை பெய்யக்கூடும் என்றும்

2

# 3 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

மூன்று மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுஎன்றுதேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

இதன்படி காலி மாவட்டத்தில் எல்பிட்டிய, நாகொட மற்றும் பத்தேகம பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், பதுளை மாவட்டத்தில் ஹல்துமுல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மாத்தளை மாவட்டத்தில் உக்குவெல, இரத்தோட்டை, வில்கமுவ மற்றும் நாவுல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை நாளை (21) செவ்வாய்க்கிழமை இரவு 8.30 மணி வரை செல்லுபடியாகும் என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் மேலும் தெரிவித்துள்ளது.



## கார் விபத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, மூன்று வருடங்களுக்கு முன் இதே பகுதியில் இதே போன்று காலை வேளையில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 3 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## பல பகுதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இடியுடன்கூடிய மழையின்போது பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைத்துக் கொள் ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் மக்களைத் தயவுடன் கேட்டுக்கொண்டுள்ளது.

## மண் சரிவு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வில் கபரகல தோட்டமும் மண்சரிவு அபாய வலயத்தில் இருந்தது. எனவே, அம்மக்களைப் பாதுகாப்பான இடங்களில் தற்காலிக மாகத் தங்கவைக்குமாறும், வீடுகளை அமைப்பதற்குப் பாதுகாப்பான இடத்தில் காணி ஒதுக்கித் தருமாறும் நாம் தோட்ட நிர்வாகத்திடம் கோரியிருந்தோம்.

எனினும், தோட்ட நிர்வாகம் காணி வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை. மக்கள் தொடர்பிலும் அசமந்தமாகச் செயற்பட்டுள்ளது.

எனவே, அரச நிர்வாகப் பொறிமுறை உரிய முன்னேற்பாடுகளைக் கோரியும், அதனை வழங்க நடவடிக்கை எடுக்காத தோட்ட நிர்வாகம் தற்போதைய மண்சரிவு அனர்த்தத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டும். – என்றார் அமைச்சர்.

## மலையகத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மண்மேடுசரிந்துவிழுந்ததில் 30 முதல் 40 வரையான லயன் வீடுகள் பாதிக் கப்பட்டுள்ளன.

காயமடைந்த எழுவரில் இருவர் கொஸ்லந்த வைத்தியசாலையிலும், இருவர் தியதலாவ வைத்தியசாலை யிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். அனர்த்தத்தில் எதுவித உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை.

## சூட்டுக் காயங்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் ஐந்து நாட்களுக்கு முன்னர் மொரகொல்ல வத்தை என்ற பகுதியில் தொழிலாளியாகச் சென்றவர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, சடலம் மீட்கப்பட்ட இடத்துக்கு அருகிலுள்ள கந்தேவத்த வனப்பகுதியிலிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட வெடிமருந்து துப்பாக்கி ஒன்றையும் பொலி–ஸார் கண்டெடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஆணையாளர்கள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரா ஜாங்க அமைச்சர் ஜனக்க வக்கும்புர கூறினார்.

உள்ளூராட்சி சபைகளின் அதிகார காலம் நிறைவடைவதற்கு முன்னதாக புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவேண்டும் என்று அரசமைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. ஏப்ரல் 25 அந்தத் தேர்தல் நடக்கும் சாத்தியங்களும் இல்லை.

## தேசபந்துவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து, இலங்கை சட்டவாளர்கள் சங்கம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தது. முன்னுதாரணமான ஒருவரையே காவல் மா அதிபராக நியமிக்கவேண்டும் என்று சங்கம் வலியுறுத்தியிருந் தது. இதனையடுத்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் பரிந்துரையை அரச தலைவர் நிராகரித்துவிட்டார் என்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற் கோள்காட்டி எக்கனாமிக் நெக்ஸ்ட் ஊடகம் தெரிவித்துள்ளது.

பதவியை "தேசபந்துவுக்கு வழங்க முடியாது என்று அரச தலைவர் தெரிவித்துவிட்டார். அனேகமாக, தற்போதைய காவல் மா அதிபரின் பத விக் காலம் மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்கப்படவே வாய்ப்புகள் உண்டு" என்று ரணிலுக்கு நெருக்கமான வட் டாரங்கள் தெரிவித்துள்ளன. தேசபந்து தென்னக்கோனை அடுத்த காவல் மா அதிபராக நியமிப்பதற்கு அமைச்சர் ரிரான் அலஸ் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தார்.

அதன் ஒரு பகுதியாக அவரது பெயரை அரச தலைவரிடமும் பரிந்துரைத்திருந்தார். அதனை அமைச்சரின் ஊடகங்கள் அரசமைப்புப் பேரவைக்கு அரச தலைவரின் பரிந்துரை என்பதாகச் செய்திகளை வெளியிட்டு அதனை உண்மையாக்க முற்பட்டன. ஆனால் "இந்த ஊடக பரப்புரை தென்னக்கோன் மற்றும் ரிரான் ஆகிய இருவருக்குமே கடைசியில் பாதிப்பாக முடிந்துவிட்டது" என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

தற்போதைய காவல் மா அதிபர் சந்தன விக்கிரமரட்ண தனது ஓய்வு தொடர்பில் அரச தலைவரைச் சந்தித்தபோது, ஓய்வுக்குப் பின்னர் பயணங்களிலும் இடங்களைச் சுற்றிப் பார்ப்பதிலும் தனது குடும்பத்தினருடன் நேரம் செலவிடப் போகின்றேன் என்று தெரிவித்திருந்தாரே தவிர, பதவி நீடிப்பு வழங்குமாறு கேட்கவில்லை என்று தெரிவிக்கும் அந்த வட்டாரங்கள், ஆனாலும் அவருக்குப் பதவிநீடிப்பு வழங்கப்படுவதற்கான வாய்ப்புகளே அதிகம் இருக்கின்றன என்று தெரிவித்தன.

# அச்சுவேலியில் 15 வயது சிறுமி துன்புறுத்தல்

யாழ்ப்பாணம் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 15 வயதான சிறுமிக்கு மதுபானம் அருந்த கொடுத்து கூட்டு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளதாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறுமியை மருத்துவ பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேமிக்குமாறு தாயாரிடம் கூறியுள்ளனர். ஆனாலும், இரவு 08 மணி வரையில் சிறுமி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாத நிலையில், சம்பவம் தொடர்பில் மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகத்துக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, சிறுமியை வைத்தியசாலையில் சேமிக்குமாறு பொலிஸாருக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

# நீதித்துறை – நாடாளுமன்றம் இடையே மோதல் ஏற்படுத்த ஆட்சியினர் முயற்சி

## ஏரான் விக்கிரமரத்ன எச்சரிக்கை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சி நீதித்துறைக்கும், நாடாளுமன்றத்திற்கும் இடையே மோதலை ஏற்படுத்துவதற்கு முயற்சிகளை எடுத்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏரான் விக்கிரம ரத்ன எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பில் நடைபெற்ற மக்கள் சந் திப்பில் கலந்துகொண்டு உரைய–ாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தவதற்கு ஜனாதிபதி உள்ளிட்ட ஆளும் தரப்பினருக்கு விருப்பமில்லை. ஆகவே அதனை அவர்கள் திட்டமிட்டு தடுப்பதற்கு முனைகின்றனர்.

உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவினை பிறப்பித்த பின்னரும்கூட, தேர்தலை நடத்துவதற்குரிய நிதியை நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விடுவிக்காது உள்ளார்.

இந்த நிலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் தொலவத்தவை வைத்து திட்டமிட்ட நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது. அந்த நாடகத்திற்கான கதை, வசனம் பிறிதொரு இடத்தில் தயாரிக்கப்பட்டு அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனை ஏற்றுக்கொண்டு அவர் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து தனது சிறப்புரிமை மீறியதாக பிரச்சினை எழுப்பியுள்ளார். அவருடைய சிறப்புரிமையை மீறியவர்களாக அவர் குறிப்பிட்டிருப்பது, உயர்நீதிமன்ற நீதியரசர்களையே. அவர் ஒரு சட்டத்தரணியாக இருந்துகொண்டு இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கின்றார்.

உண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் தொலவத்தவை பயன்படுத்தி நீதித்துறைக்கும், நாடாளுமன்றத்திற்கும் மோதல் நிலைமைகளை உருவாக்குவதே திட்டமாகும். இதற்கு இடமளிக்க முடியாது. ஜனநாயகத்தின் தூண்கள் முட்டுப்படுதை ஏற்றுக்கொள்ள முடியாது – என்றார்.

# அரை சொகுசு பஸ்களின் சேவை ஏப்ரலில் நிறுத்தம்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடுப்பகுதியிலிருந்து அரை சொகுசு பஸ்கள் இரத்துச் செய்யப்படுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரை சொகுசு பஸ்கள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன. இந்த பஸ்களுக்கும் சாதாரண பஸ்களுக்கும் வித்தியாசம் இல்லாதது அவதானிக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதைத் தடுப்பதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.




# நீதித்துறையை அச்சுறுத்தும் செயற்பாடுகள் நாடாளுமன்றத்தின் ஊடாக முன்னெடுப்பு!

## விஜித ஹேரத் சுட்டிக்காட்டு



உயர்நீதிமன்ற நீதிபதிகளை நாடாளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை குழுவுக்கு அழைத்தால் பாரதூரமான விளைவுகள் ஏற்படும். நீதித்துறையை அச்சுறுத்தும் செயற்பாடுகள் நாடாளுமன்றத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு அப்பாற்பட்ட வகையில் செயற்படுகிறார் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

340 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவுடன் நிறைவு பெற்றது. மாகாண சபைகளைப் போல் உள்ளூராட்சி மன்றங்களும் தற்போது மக்கள் பிரதிநிதிகள் இல்லாத நிர்வாகக் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நிறைவு பெறுவதற்கு முன்னர் தேர்தலை நடத்தி புதிய மன்றம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகட்டளைச்சட்டத்தின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இறுதி பகுதியில் இடம்பெற்றிருக்க வேண்டும். விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சரால் ஒரு வருட காலத்துக்கு பிற்போடப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தொடர்ந்து பிற்போட அரசாங்கம் முறையற்ற வகையில் செயற்படுகிறது.

நிதி நெருக்கடி என்ற தர்க்கத்தை முன்வைத்துக் கொண்டு அரசாங்கம் தேர்தல் செயற்பாடுகளுக்கு பாரிய தடைகளை ஏற் படுத்தி வருகிறது. நாடாளுமன்றத்தால் ஒதுக்கப்பட்ட நிதியை நிதியமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுவிக்காமல் உயர் நீதிமன்றத்தின் இடைக்கால தடையுத்தரவை மதிக்காமல் செயற்படுகிறார்.

உயர்நீதிமன்ற நீதிபதிகளை நாடாளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமை தொடர்பான குழுவுக்கு அழைக்க ஆளும்தரப்பு அவதானம் செலுத்தியுள்ளது.நீதிபதிகளை விசாரணைக்கு உட்படுத்தும் அதிகாரம் நாடாளுமன்ற சிறப்புரிமை குழுவுக்கு கிடையாது. நீதிமன்றத்தை மலினப்படுத்தும் செயற்பாடுகள் பாரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்தும்.

நீதித்துறையின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்க நாட்டு மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவார்கள், நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை நீதிபதிகள் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. - என்றார்.

# கோட்டாபய ராஜபக்ஷ நாட்டுக்கு அழிவையே மிகுதியாக்கியுள்ளார்

## கெவிந்து குமாரதுங்க குற்றச்சாட்டு



நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயற்படவில்லை. நாட்டுக்கு அழிவையே மிகுதியாக்கினார்.

ஆகவே, அவர் பதவி விலகியதையிட்டு நாங்கள் கவலையடையவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்கு தோற்றுவதை கட்டாயமாக்கும் வகையில் 2020 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் உறுதியான தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

ஒரு மாணவன் தனது தாய் மொழியில் கல்வி கற்பதற்கு அரசமைப்பின் ஊடாக உரிமை வழங்கப்பட்டுள்ளது.

இந்த உரிமையை மறுக்கும் வகையில் தான் 2020 ஆம் ஆண்டு சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற வர்த்தமானி வெளியிடப்பட்டது.

இந்தத் தீர்மானத்தால் சாதாரண மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

சட்டக் கல்லூரி பரீட்சை மொழி தொடர்பான பிரச்சினைக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்பேற்க வேண்டும்.

இந்தத் தவறை நாடாளுமன்றத்தின் ஊடாக திருத்திக்கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஆகவே, சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் தான் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்ற வர்த்தமானியை நாடாளுமன்றத்தின் ஊடாக இரத்து செய்ய சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆட்சிக்கு கொண்டு வர நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். சிறந்த மாற்றத்தை எதிர்பார்த்தோம். ஆனால், எதிர்பார்ப்புக்கள் ஏதும் நிறைவேறவில்லை.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை கோட்டாபய ராஜபக்ஷ நிறைவேற்றவில்லை. முறையற்ற வகையில் செயற்பட்டார்;. நாட்டுக்கு அழிவை மாத்திரம் மிகுதியாக்கினார்.

ஆகவே, இரண்டரை வருட காலத்தில் மக்கள் போராட்டத்தால் அவர் பதவி விலகியதையிட்டு நாங்கள் கவலையடையவில்லை. - என்றார்.

# பேராதனை பல்கலைகழகத்தில் கட்டியணைக்கத் தடையில்லை

## துணைவேந்தர் கூறுகிறார்

பேராதனைப் பல்கலைக்கழக வளாகத்தில் கட்டியணைக்கத்தடையல்ல, ஆனால் அளவுக்கு மீறிய செயற்பாடுகள் அனுமதிக்கப்படமாட்டா என பேராதனை பல்கலைக்கழகத் தின் துணைவேந்தர் பேராசிரியர். டி.எம். லமாவன்ச தெரிவித்துள்ளார்.

அண்மையில் பேராதனை பல்கலைக்கழகத்தின் செனட் கட்டடத்துக்கு அருகில் காதலர்கள் இருவர் கட்டித் தழுவியபடி நின்றிருந்த சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்தின் நடவடிக்கை தொடர்பாக சமூக ஊடகங்களில் விமர்சனங்கள் எழுந்துள்ளதைத் தொடர்ந்து அவர் இதனைத் தெரிவித்தார்.

மாணவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை கட்டுப்படுத்தப் போவதில்லை.

பல்கலைக்கழக வளாகத்தில் 1700 ஏக்கர் நிலப் பரப்பில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை எந்த வகையிலும் கட்டுப்படுத்தப் போவதில்லை என்றும் துணைவேந்தர் குறிப்பிட்டுள்ளார். எமது நோக்கம் மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் நிலைநிறுத்துவதும் அவர்களின் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதும் ஆகும்.

கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் போராட்டங்களைத் தொடர்ந்து ஏற்பட்ட விளைவுகளில் மாணவர்களும் விரிவுரையாளர்களும் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதைக் கருத்தில் கொண்டு, நல்ல மனநிலையுடன் இணக்கமான குழுவாக பணியாற்ற அவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக வளாகத்தில் கட்டித்தழுவுவது தடை செய்யப்படவில்லை, எனினும் பல்கலைக்கழகத்துக்கு பார்வையாளர்களாக வருகை தரும், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் கல்விச் சுற்றுலா வரும் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டவர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தாதவாறு பல்கலைக்கழக மாணவர்கள் தங்களின் வரம்புகளை அறிந்து செயற்பட வேண்டும் என்றும் துணைவேந்தர் மேலும் கூறினார்.

# ஆட்சியாளர்களின் நோக்கத்திற்கேற்பவே தேர்தல்கள் ஆணைக்குழு செயற்படுகிறது

## வீரசுமன வீரசிங்க சாடல்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் ஆட்சியாளர்களின் நோக்கத்திற்கு சார்பாகவே தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு செயற்படுகிறது. வாக்கெடுப்பை நடத்த ஆணைக்குழு எடுத்த தீர்மானங்கள் அரச நிறுவனங்களுக்கிடையில் முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளன என இலங்கை கம்யூனிசக் கட்சியின் பதில் தலைவர் வீரசுமன வீரசிங்க தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்எதிர்வரும்ஏப்ரல்மாதம் 25 ஆம் திகதி இடம்பெறாது, தேர்தலுக்கான புதிய திகதி நியமிப்பதும், வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்கு நிதி கிடைக்கவில்லை. ஆகவே, வாக்குச்சீட்டுக்களை வழங்க முடியாது என அரச அச்சகத் திணைக்கள தலைவர் குறிப்பிடுவதும், பின்னர் தேர்தல் பிற்போடப்படுவதும் வழக்கமாகி விட்டது.

நாட்டு மக்களின் தேர்தல் உரிமை கேலிக்கூத்தாக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் நோக்கத்துக்கு சார்பாகவே தேர்தல்கள் ஆணைக்குழு செயற்படுகிறது. ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மந்தகதியில் காணப்படுகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரங்கள் கடந்த செப்ரெம் பர் மாதம் ஆணைக்குழுவுக்கு பொறுப்பாக்கப்பட்டது.

ஆனால் தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி தேர்தலுக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

வாக்கெடுப்பை நடத்துவதற்கு சகல அரச நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழு எடுத்த தீர்மானங்களை அரச நிறுவனங்கள்செயற்படுத்தமறுக்கின்றன. தூரநோக்கமற்ற தீர்மானங்களால் துறைசார் மட்டத்தில் முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெற்றால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வி அடையும் என்பதால் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பிற்போடப்படு கிறது.

இரண்டு அரசியல் கட்சிகளுக்காக நாட்டு மக்களின் அடிப்படை வாக்குரிமையை மலினப்படுத்துவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.- என்றார்.



# அன்னை பூபதி நினைவு மட்டக்களப்பில் ஆரம்பம்

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தியாக தீபம் அன்னை பூபதியின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் நாள் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு நாவலடியிலுள்ள அவரது கல்லறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

1988.03.19 ஆம் திகதி சாகும்வரையிலான உண்ணாவிரத போராட்டத்தின் ஆரம்ப நாள் நேற்று அனுஷ்டிப்பு ஆரம்பமானது.

மட்டக்களப்பு - நாவலடியில் அமைந்துள்ள அன்னை பூபதியின் நினைவுத் தூபியில் அவரின் பிள்ளைகள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இவர் மட்டக்களப்பில், அஹிம்சை ரீதியில் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராக நீரை மட்டுமே அருந்தி, சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த பெண்மணியாவார்.

'உடனடியாக போர் நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்', 'புலிகளுடன் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும்' என்ற கோரிக்கைகளை முன்வைத்தே மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் குருந்தை மரநிழலில் 1988.03.19 ஆம் திகதி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை அன்னை பூபதி ஆரம்பித்தார்.

பத்துப் பிள்ளைகளுக்கு, தாயார் இவர். நீர் மட்டும் அருந்திச் சாகும் வரை உண்ணா நோன்பு இருந்தார். இடையில் பல தடங்கல்கள் வந்தன. உண்ணாவிரதத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்களையும், அன்னை பூபதியின் பிள்ளைகள் சிலரையும், இந்திய இராணுவம் கைது செய்தது. ஆயினும் போராட்டம் நிறுத்தப்படவில்லை.

அன்னை பூபதி அவர்கள் முன்னெச்சரிக்கையாக 'சுயவிருப்பின் பேரில் உண்ணாவிரதமாயிருக்கிறேன்.

எனக்கு சுயநினைவை இழக்கும் பட்சத்தில் எனது கணவனோ, அல்லது பிள்ளைகளோ என்னை வைத்தியசாலையில் சேர்க்க முயற்சிக்கக் கூடாது' எனக் கடிதம் எழுதி வைத்தார்.

அவர் உறுதியாகப் போராட்டத்தைத் தொடர்ந்தார். கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சரியாக ஒரு மாதத்தின் பின் 19.04.1988 அன்று காலை 8.45, மணிக்கு அவர் உயிர்நீத்தார்.

# வவுனியாவில் மேலும் 2 சிலைகள் அமைக்கும் பணி தடுத்து நிறுத்தம்

## ஒருங்கிணைப்பு குழு தலைவர் திலீபன் சுட்டிக்காட்டு



வவுனியா நகரில் அனுமதியின்றி போராட்டக் குழுக்களின் தலைவர்களுக்கு சிலை அமைக்கும் நடவடிக்கை தடுத்துநிறுத்தப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மணிக்கூண்டு கோபுர சந்திக்கு முன்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணியில் தந்தை செல்வா சிலைக்கு அருகில் முறையான அனுமதி பெறப்படாது ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் தலைவர் பத்மநாபாவுடைய சிலை கடந்த சில நாள்களுக்கு முன்னர் அவசர அவசரமாக நகரசபையால் நிறுவப்பட்டிருந்தது.

அத்துடன், குறித்த சிலைக்கு அண்மையில் மேலும் இரண்டு சிலைகளை நிறுவும் நடவடிக்கை அவசர அவசரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதையடுத்து இது தொடர்பில் மாவட்டச் செயலர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவற்றுடன் இந்தச் சம்பவம் தொடர்பில் உரையாடியிருந்தேன்.

இதனையடுத்து, வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் முறையான அனுமதி பெறப்படாது அவர்களது ஆட்சேபனை கடித்தை மீறி இன்றும் (கடந்த ஞாயிற்றுக்கிழமை) புதிய இரு சிலைகட்டுமான நடவடிக்கை இடம்பெற்றதையடுத்து வவுனியா பொலிஸாரிடம், அனுமதிபெறாது சிலைநிறுவியமை தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டையடுத்து கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள பொலிஸார் தடை விதித்துள்ளதுடன், அங்கு வேலை செய்தவர்களையும் அனுப்பியுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நள்ளிரவுடன் நிறைவு பெறும் நிலையில் வவுனியா மண்ணில் முறையற்ற மற்றும் சட்டவிரோத செயற்பாட்டை தற்போதைய நகரசபை முன்னெடுத்த நிலை யிலேயே தடுத்து நிறுத்தப் பட் டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## குழந்தைகளின் எதிர்காலம் முக்கியம்

வேண்டாத குழந்தைகளை அரசே பொறுப்பெடுத்துப் பராமரிகக்கும் நிலையங்களை உருவாக்குவதற்கு திட்டமிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பெண்கள், சிறுவர் விவகார, சமூக வலுவூட்டல் அமைச்சர் கீதா குமாரசிங்கே 'குழந்தைஏற்புமுனையங்கள்' உருவாக்கப்படும் என்கிறார்.

பெரும்பாலான குழந்தைகள் வறுமை, பட்டினி காரணமாகக் கைவிடப்படுவதில்லை என்றும் பணம் இல்லை என்பதால் குழந்தையைக் கைவிட்டோம் என்று எந்தவொரு தாயும் கூறியதாக இல்லை என்றும் அமைச்சர் கூறுகின்றார். தனிப்பட்ட கோபங்கள், பழிவாங்கலுணர்வு காரணமாகவே குழந்தைகள் கைவிடப்படுகின்றார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பு கோட்டைத் தொடருந்து நிலையத்தில் தொடருந்து கழிப்பறைக்குள் கூடைக்குள் பத்திரமாக வைக்கப்பட்ட நிலையில் இருந்த குழந்தை ஒன்று மீட்கப்பட்டது. திருமணம் செய்யாத நிலையில் குழந்தையைப் பெற்றெடுத்த அதன் பெற்றோர் சமூகத்தின் பழிச் சொல்லுக்கு அஞ்சி அதனை யாராவது வளர்க்கட்டும் என்று தொடருந்தில் கைவிட்டனர் என்று தெரிவித்திருந்தனர்.

புத்தளத்தில் தாய் ஒருவர் தனது குழந்தையை இறால் பண்ணை குளத்திற்குள் தள்ளிவிட்டுள்ளார். வடக்கில் குழந்தைகளையும் கொன்று பெற்றோர் தாமும் உயிர் மாய்த்த பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்தப் பின்னணியிலேயே 'குழந்தை ஏற்பு முனையங்கள்' தொடங்குவது குறித்த அறிவிப்புக்கள் கவனம் பெறத் தொடங்கியுள்ளன. "தங்கள் குழந்தைகள் தங்களுக்குப்பாரம்என்றுஎண்ணினாலோதம்மால்அந்தக் குழந்தையை வளர்க்க முடியாது என்று எண்ணினாலோ எந்தப் பெற்றோரும் இந்த முனையங்களில் தமது குழந்தைகளை ஒப்படைக்க முடியும்" என்று தெரிவிக்கிறார் அமைச்சர்.

2021ஆம் ஆண்டிலேயே இத்தகைய நிலையங்களை அமைக்கவேண்டும் என்று சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் அது செயற்படுத்தப்படவில்லை.

இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் எந்தவொரு தாயும் பிறர் அறியாத வகையில் தனது குழந்தையைக் கொண்டு வந்து ஒப்படைத்துவிட்டுச் செல்ல முடியும் என்று சொல்லப்படுகின்றது. அப்படி நடந்தால் அதன் பாரதூரத் தன்மை, சமூகத்தில் அது ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு என்பன தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தப்படவேண்டும். ஆய்வுகள் செய்யப்படவேண்டும்.

ஏற்கனவே இதுபோன்ற ஒரு நடைமுறை சட்டங்களுக் கூடாக பயன்பாட்டில் உள்ளது. விரும்பத்தகாத நிலையில் பிறக்கும் குழந்தைகளை, அதாவது பாலியல் வன்புணர்வுகளால் ஏற்படும்கருத்தரிப்பு மூலம் பிறக்கும் குழந்தைகளை நீதிமன்றத்தின் ஊடாக அரச பராமரிப்பு இல்லங்களுக்குக் கொடுக்கும் நடைமுறை உள்ளது. அது கடினமான சட்ட ஒழுங்குகள் ஊடாகவே மேற்கொள்ளப்படக்கூடியது. அதனால் அதற்கூடாகக் கையளிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை மிகக் குறைவானதே.

இப்போது முன்வைக்கப்படும் திட்டத்தின் மூலம் குடும்பச் சண்டைகளினால் விரக்தியுறும் தாய்மார்களில் பலரும் தமது குழந்தைகளை அரசிடம் ஒப்படைத்துவிடும் அபாயம் இருக்கின்றது. அப்படி நடந்தால் அது குடும்பங்களையும் குழந்தைகளையும் கடுமையாகச் சிதைத்துவிடும். அத்தோடு பெரும் எண்ணிக்கையிலான குழந்தைகள் அப்படிப் அரச பராமரிப்புக்கு வந்தால் அவற்றைப் பாராமரிப்பதற்குத் தேவையான வசதிகள் அரச கட்டமைப்பில் இல்லை என்பதும் கவனிக்கப்படவேண்டும்.

எனவே எடுத்தோம் கவிழ்த்தோம் என்று இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்திவிட முடியாது. அது பற்றி ஆழமான ஆய்வுகளும் கலந்துரையாடல்களும் முன்வைக்கப்படவேண்டும். இந்தத் திட்டத்திற்கு மாற்றாக தனிப் பெற்றோர் (சிங்கிள் பேரன்ட்) முறையில் தாயே தன் குழந்தையை வளர்கக்கக்கூடிய பொருளாதார மற்றும் சமூகச் சூழலை அரசே ஏற்படுத்திக் கொடுப்பதற்கான மாற்று வழி குறித்தும் சிந்திக்கப்படவேண்டும். அரச பராமரிப்பு இல்லங்களைவிட தனது தாயிடம் ஒரு குழந்தை வளர்வதே அதற்கு ஆரோக்கியமானதும் அதன் எதிர் காலத்திற்குச் சிறந்ததுமாகும் என்பதும் கவனிக்கப்படவேண்டும்.

# நிதி கிடைத்தவுடன் தேர்தல் நடக்குமாம்!

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்



உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் தொடர்பாக ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஊடகங்களுக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் யாழ்ப்பாணம் மாவட்ட வேட்பாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவுடன் நிறைவடைவது பற்றி ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளித்ததுடன், நிதி கிடைத்தால் எந்த நேரமும் தேர்தல் நடக்கலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டத்தின் உள்ள உள்ளூஜூராட்சி மன்றங்களில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## கடல் ஆமையை இறைச்சிக்காக பிடித்தவருக்கு நீதிமன்று தண்டம்!

### யாழ். வேலணையில் சம்பவம்

யாழ்.வேலணைபகுதியில் கடல் ஆமையுடன் கைதான நபருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வேலணை – சாட்டிப்பகுதியில் கடல் ஆமை ஒன்றை இறைச்சிக்காக வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து கடல் ஆமையும் பொலிஸாரால் மீட்கப்பட்டது. அதன்பின்னர் அவருக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் கடந்த வியாழக்கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் ஊர்காவற்றுறைப்பொலிஸாரால்மீட்கப்பட்ட கடல் ஆமையை வனஜீவராசிகள் திணைக்களத்தின் உதவியுடன் கடலில் விடுமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

## இந்திய முப்படைகளையும் சேர்ந்த 19 அதிகாரிகள் இலங்கை வருகை

இந்தியாவின் முப்படைகளைச் சேர்ந்த 19 அதிகாரிகள் இலங்கைவந்தடைந்துள்ளனர்.

இந்த குழுவினர் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்எனத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த அதிகாரிகள் 46 ஆவது உயர் விமானக் கட்டளைப் பாடத்தின் கீழ் ஒரு வாரகால உத்தி சார்ந்த ஆய்வுப்பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வந்துள்ளனர்.

மூன்று சேவைகளில் இருந்தும் மூத்த கட்டளை மற்றும் பணியாளர் நியமனங்களுக்கான பயிற்சியின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் இந்தக் குழுவில் அடங்கியுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது, இந்திய அதிகாரிகள் இலங்கை கடற்படை கட்டளை, கடலோர காவல்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றை பார்வையிட்டு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர். இலங்கையுடனான இந்தியாவின் பாதுகாப்பு பங்காளித்துவத்தை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்பாக இந்த விஜயம் அமைவதாக இந்திய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

# பன்னாட்டு நாணய நிதியக் கடன் மக்களை நெருக்கடிக்குள் தள்ளும்

## எரான் விக்ரமரத்ன எச்சரிக்கை

பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு ஆட்சியாளர்களிடம் எந்தவொரு ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களும் கிடையாது.

சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் கிடைக்கவிருக்கும் கடன் உதவி எதிர்காலத்தில் உழைக்கும் வர்க்கத்தினரையும், வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மக்களையும் நெருக்கடிக்குள் தள்ளும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சியாளர்கள் ஆதரவு வழங்காமைக்கான காரணம் என்னவென சிலர் எம்மிடம் வினவுகின்றனர். நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், உழைக்கும் மக்களுக்களினதும் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் கொள்கையும், முறையான திட்டங்களையும் நடைமுறைப்படுத்துமாயின் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தயாராகவே இருக்கிறோம்.

தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதார கொள்கைகள் மக்களின் வாழ்க்கைக்கு பேரிடியாக அமைந்துள்ள நிலையில் அதற்கு ஆதரவளிப்பதால் நாம் நிராகரிக்கப்படுவோம்.

மேல் மட்டத்தில் உள்ளவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அரசாங்கத்துக்கு ஆதரவளிக்குமாறு எம்மிடம் கேட்கின்றனர். ஆனால் அனைத்து மக்களையும் மீட்டெடுக்கும் பொறுப்பு எமக்குள்ளது.



எதிர்க்கட்சி சமூக பொருளாதாரக் கொள்கையின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறது. சமூக பொருளாதாரக் கொள்கையை அரசாங்கம் பின்பற்றினால் நாம் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கத் தயார். இந்த அரசாங்கம் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட இலங்கைக்கு நிதியளிக்கும் பல்வேறு குழுக்களுடனும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருக்கிறது.

இந்த அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டம் பற்றி பேசியது, குறித்த திட்டங்கள் எங்கே? மக்களைத் தூக்கிலிட்ட பின்னர் மக்களுக்கு உணவளிக்கும் முறைமையே காணப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தின் படி இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலர்கள் கடன் கிடைக்கவிருக்கிறது. இலங்கை நிதிச் சந்தையில் குறித்த நிதியை எவ்வாறு அரசாங்கம் பயன்படுத்தப் போகின்றது என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

கடன் பெறும்போது அவர்களின் ஒப்பந்தந்தங்களுக்கு அடிபணிய நேரிடும். சில சரத்துகளை ஏற்றுக்கொள்ள முடியாததாலேயே நாம் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கவில்லை.

ஒப்பந்தம் வெற்றி என்றாலும் நிபந்தனைகளில் யாருக்கு பாதிப்பு என்று நாம் சிந்திக்க வேண்டும். இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் நாட்டில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் இருக்கும் மக்களும், உழைக்கும் மக்களும் பாரியளவில் பாதிப்புகளை சந்திக்கவுள்ளனர். கடன்பெற்று கொள்ளும்போது வறுமையிலுள்ள மக்களையும் உழைக்கும் மக்களையும் பாதுகாக்கும் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

இந்தக் கடனைப் பெற்ற பின்னர் முதலாவது மின்சார கட்டணம் தொடர்பான பிரச்சினைகள் எழும். அதிகளவிலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு, பலரும் தொழிலை இழந்துள்ளனர். மின்கட்டணம் அதிகரிப்பு, உணவுப் பொருள்க ளின் விலை ஏற்றம் காரணமாக மக்களின் வருவாய் இழக்கச் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு இந்த அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும்.

கடந்த வருடம் பொருளாதார திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டது. இந்த வருடமும் பலதிருத்தங்கள் முன்வைக்கப்பட்டன.

இவ்வாறு நாட்டு மக்களைத் தூக்கிட்டு கழுத்தை நெரித்து கொள்வதன் ஊடாகத் தானா பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்? சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்த பின்னர் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும் என அரசாங்கம் கூறுவது அப்பட்டமான பொய்யாகும். – என்றார்.

# பொலிஸ் சோதனைகளில் ஊடகங்களுக்குத் தடை

## பொலிஸ் மா அதிபர் கண்டிப்பான உத்தரவு



நடத்தப்படும் சோதனைகள், நடவடிக்கைகள், சந்தேகநபர்களை விசாரணை செய்தல், கைது செய்தல் போன்றவற்றை ஊடகங்களில் காணொளிகளாக மற்றும் படங்களாக வெளியிடுவதைத் தடை செய்யுமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களினதும் பொறுப்பதிகாரிகளுக்கும் பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில்பட்டக்களப்புயிலில் குழந்தையொன்றை கைவிட்டுச் சென்ற சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட காணொளி காட்சிகள் அனைத்து பிரதான ஊடகங்களிலும் பரவியதையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரை விசாரணை செய்யும் விதம் ஊடகங்கள் ஊடாக விளம்பரப்படுத்தப்படுவதால், சந்தேகநபருக்கு சங்கடத்தை ஏற்படுத்துவதுடன் பொலிஸ் நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையும் என்பதால், ஊடகங்களை சோதனை நடவடிக்கைகளின் போது அழைத்துச் செல்வதை நிறுத்துமாறு பொலிஸ் தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.



# பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டார் இம்ரான் கான் மீது குற்றச்சாட்டுப் பதிவு

## சனிக்கிழமை பொலிஸார் தாக்கப்பட்டதை அடுத்து

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் மனற்றும் அவரது உதவி–யாளர்கள், ஆதரவாளர்கள் மீது அந்த நாட்டுப் பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனர்.

ஏற்கனவே அவர் மீது 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இந்தக் குற்றச்சாட்டுக்கள் புதிதாகப் பதிவு செய்–யப்பட்டுள்ளன.

இம்ரான் கான், அவரது உதவிய–ாளர்கள் 17 பேர் மற்றும் டசின் கணக்கான ஆதரவாளர்கள் மீது இஸ்லாமாபாத் பொலிஸார் குற்றச்சாட்டுக்களைப் பதிவு செய்துள்ளனர்.

ஊழல் வழக்கில் சனிக்கிழமை பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் வருகைதரவிருந்த நீதிமன்றத்தின் முன் அவரது தெஹ்ரீக்–இ–இன்சாப் (பிரிஜ) கட்சித் தொண்டர்கள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டனர். அவர்கள் பொலிஸார் மீது பெற்றோல் குண்டுகளையும் கற்களையும் வீசித் தாக்கினர். இதனால் தடியடி நடத்தியும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் அவர்கள் கலைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்தே இம்ரான் கான் மீது அவரது ஆதரவாளர்கள் மீதும் பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

முன்னதாக, என்னைக் கைது செய்தால் நாடு தூங்கிவிடும் இருக்கும் என்று இந்த ஆட்சியாளர்கள் நினைக்கிறார்கள். அது தவறு என்று அவர்களுக்கு நிரூபியுங்கள் என இம்ரான் கான் தனது ஆதரவாளர் களுக்கு அறைகூவல் விடுத்திருந்தார். "வெளியே வாருங்கள்.

அவர்கள் நினைப்பது தவறு என்று நிரூபியுங்கள்'' என்று அவர் பேசும் காணொலி ஒன்று வெளியிடப்பட்டது.

சனிக்கிழமை நடந்த மோதல்களில் ஏறக்குறைய 50 பொலிஸார் காயமடைந்தனர், மேலும் ஒரு பொலிஸ் சோதனைச் சாவடி நொருக்கப்பட்டது, அத்துடன் பல கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்குத் தீவைக்கப்பட்டன. இது தொடர்பில் கானின் ஆதரவாளர்கள் 59 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தெரிவித்தது.

# எல்லைகளற்ற நாடு கைலாசா அறிவித்தது அதன் அலுவலகம்



கைலாசா எல்லைகள் அற்ற ஒரு நாடு. கோயில்கள், மடங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் வழியே செயல் படும். உலகஅமைதிக்காக கைலாசா செயல்படுகிறது என்று அறிவித்துள்ளார் அதன் தலைவரான நித்தியானந்தா.

கைலாசா நாடு எங்கே இருக்கிறது என்பது குறித்த தெளிவான தகவலை இது வரை நித்தியானந்தா வெளியிட் டதில்லை. இந்நிலையில் கைலாசா என்பது எல்லைகள் அற்ற சேவை நோக்கம் கொண்ட தேசம் என்று கைலாசாவின் செய்தி அலுவலகம் தெரிவித்து.

கடந்த வெள்ளிக்கிழமை, கைலாசாவின் செய்தி அலுவலகம் கைலாசா குறித்த கேள்விக்குப் பதில் அளிப்பதாக அறிவித்தது. அதையொட்டி எழுப்பப் பட்ட கேள்விகளுக்கு அந்த அலுவலகம் பதில் வழங்கியுள்ளது.

அதில் மால்டா போல் கைலாசா எல்லைகள் அற்ற ஒரு நாடு. கோயில்கள், மடங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் வழியே செயல்படும். உலகஅமைதிக்காக கைலாசா செயல் படுகிறது. வேதங்கள்தான் கைலாசாவின் அரசியலமைப்புச் சட்டம். தர்ம சாஸ்திரம்தான் கைலாசாவின் நீதிமுறை. சனாதன இந்து தர்மப்படி இந்த நாடு கட்டமை க்கப்பட்டுள்ளது. பண்டைய இந்து நாகரீகத் தின் மறுமலர்ச்சியாக செயல்படுகிறோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நித்தியானந்தா மீதான குற்றச்சாட்டுகள் குறித்த கேள்விக்கு, அந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் புனையப்பட்டவை என்று கைலாசாவின் செய்தி அலுவலகம் தெரிவித்துள்ளது.

நித்தியானந்தா மீது இந்தியாவில் பாலியல் குற்றங்கள், கொலைகள் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இவை தொடர்பான வழக்குகளுக்கு வருகை தராத காரணத்தால் அவர் இந்தியாவில் தேடப்படும் சந்தேகநபராக இருக்கிறார்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கைலாசாவின் பிரதிநிதி கள் உரையாற்றியமையும் அமெரிக்காவில் 30 நகரங்களுடன் கைலாசா சகோதர ஒப்பந்தங்களைச் செய்துகொண்டமையும் ஊடகங்களில் பரபரப்பானது. இவையெல் லாம் கைலாசாவை ஐ.நாவும் அமெரிகக் காவும் அங்கீகரித்தமைக்கான அறிகுறிகள் என்று நித்தியானந்தா தெரிவித்ததை அடுத்து

அது ஊடகங்களில் பேசு பொருளானது. இதையடுத்து கைலாசாவை ஐ.நா. அங் கீகரிக்கவில்லை என்றும் எந்த அமைப் பையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பேச அனுமதிப்பது வழமை என்றும் ஐ.நா. விளக்கமளித்தது. அமெரிக்க நகரம் ஒன்று கைலாசா என்பது ஒரு நாடல்ல என்பதை உணர்ந்து ஒப்பந்தத்தை நிறுத்திவிட்டதாகத் தெரிவித்திருந்தது.

# ஆக்கிரமிக்கப்பட்ட உக்ரைன் நகருக்கு ரஷ்ய அதிபர் பயணம்

உக்ரைனிடமிருந்து ரஷ்யா ஆக்கிர மித்த மரியுபோல் பகுதியை அந்நாட்டு அதிபர் விளாடிமிர் புடின் பார்வையிட்டார் என்று தகவல் வெளியாகி உள்ளது.



கடந்த ஓர் ஆண்டுக்கும் மேலாக நடைபெற்று வரும் உக்ரைன் மீதான ரஷ்ய போர் காரணமாக, மரியுபோல் உள்ளிட்ட சில பகுதிகள் ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன. அந்தப் பகுதிக்கு புதின் திடீரென பயணம் செய்தார் செய்தி வெளியாகி உள்ளது.

சனிக்கிழமை இரவு மரியுபோல் பகு திக்கு காரில் சென்ற புதின், அங்கிருந்த மக்களுடன் உரையாடினார் என்று ரஷ்ய அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. மே லும் மரியுபோல் நகரத்தை மீட்டுருவாக்கம் செய்வது குறித்து அவர் பேசினார் எனவும் கூறப்படுகிறது.

உக்ரைனின் பகுதிகளை ரஷ்யா கைபற்றிய பிறகு புடின் மேற்கொண்ட முதல் பயணமாக இது கருதப்படுகிறது.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையில் இணைய உக்ரைன் முடிவெடுத்தது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளுடனும் உக்ரைன் நெருக்கம் காட்டியது. இந்த நடவடிக்கைகளால் தங் கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள தாக கூறி, உக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் போர் தொடுத்தது. இப்போரினால் உக்ரைனில் ஆயிரக்கணக் கான மக் கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். லட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து இருக்கிறார்கள். ரஷ்யாவுக்கு எதிராக போர் குற்ற நடவடிக்கைகளை உலக நாடுகள் எடுக்க வேண்டும் என்று உக்ரைன் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

# கொங்கோவில் ஆயுதக் குழுக்கள் அப்பாவி மக்கள் மீது தாக்குதல்



## 22 பேர் உயிரிழப்பு

மத்திய ஆப்பிரிக்க நாடான கொங்கோ குடியரசில் உள்நாட்டுப் போர் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அதேவேளை கொங் கோவில் பல்வேறு ஆயுதக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன.

ஆயுதக் குழுக்கள் அவ்வப்போது பொதுமக்கள் மீதும் பாதுகாப்பு படையினர் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த சம்பவங்களில் பலர் உயி ரிழந்து வருகின்றனர். ஆயுதக் குழுக்களை ஒழிக்கும் நடவடிக்கையில் கொங்கோ பாதுகாப்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கொங்கோவின் கிழக்கு இடுரி மற்றும் வடக்கு கிவு மாகாணங்களில் ஞாயிற்றுக்கிழமை ஆயுதக் குழு ஒன்றைச் சேர்ந்தவர்கள் திடீர் தாக்குதல் நடத்தினர். இந்த மாகா ணங்களில் உள்ள கிராமங்களுக்குள் புகுந்த அவர்கள் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதில் பொதும க்கள் 22 பேர் உயிரிழந்தனர்.

ஏன் எதற்கு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரியவரவில் லை. எந்த ஆயுதக் குழுவும் இந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரவு மில்லை.

இந்த சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு படையினர் விசாரணை நடத்தி வருகின்ற னர். மேலும், தாக்குதல் நடந்த பகுதி களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

# மோடியை கொண்டாடும் சீனர்கள்



இந்தியா-சீனா இடையே கிழக்கு லடாக்கில் 3 ஆண்டுகளாக எல்லைத் தகராறு நீடித்து வந்த போதிலும், சீனாவைச் சேர்ந்த சமூகவலைத்தள பயனர்களான 'நெட்டிசன்'களால் பிரதமர் மே ாடி புகழப்பட்டு வருவது தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவை சேர்ந்த 'தி டிப்ளோமட்' என்ற பத்திரிகையில் மு சுன்ான் என்ற பத்தி ரிகையாளர் எழுதிய 'சீனாவில் இந்தியா எப்படி பார்க்கப்படுகிறது?' என்ற கட்டுரையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மு சுன்ான், சீன சமூக வலைத்தளங்களை ஆய்வு செய்து பிரபலமானவர். சீனாவில் கீச்சகம் (ட்விற்றர்) போன்ற 'சினா வெய்போ' சமூக வலைத்தளத்தை 58 கோடியே 20 லட்சம் பேர் பயன்படுத்தி வருகிறார்கள். அதில், பிரதமர் மோடியை 'மே ாடி லவோக்சியன்' என்று பட்டப்பெயரிட்டு சீன நெட்டிசன்கள் அழைத்து வருகிறார்கள். அதற்கு 'மோடி-அழிவில்லாதவர்' என்று பொருள்.

மற்ற தலைவர்களை விட மோடி மிகவும் அற்புதமானவர் என்று நினைக்கிறார்கள். மோடி தலைமையிலான இந்தியா, மற்ற பெரிய நாடுகளிடையே சம மதிப்போடு பராமரித்து வருவதாகவும் சீன நெட்டிசன்கள் கூறுகிறார்கள். மோடி பின்பற்றும் கொள்கைகள், இந்தியாவின் முந்தைய கொள்கைகளில் இருந்து மாறுபட்டவை என்பது அவர்களின் கருத்து. '

எனது 20 வருட சர்வதேச பத்திரிகை அனுபவத்தில், எந்த வெளிநாட்டு தலைவரையும் சீன நெட்டிசன்கள் பட்டப்பெயரிட்டு அழைப்பது மிகவும் அபூர்வம். மோடி அந்த அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளார் - என்று மு சுன்ான் தெரிவித்துள்ளார்.

## பேருந்து விபத்தில் பங்களாதேஷில் 19 பேர் இறப்பு

வங்காளதேசத்தில் ஷிப்சர் மாவட்டம் மதரிபூ ரில் இருந்து பயணிகளு டன் டாக்காவை நோக்கி சொகுசு பேருந்து ஒன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு புறப்பட்டு சென்றது. புதிதாக கட்டப்பட்ட எக்ஸ்பிரஸ் சாலையில் சென்றுகொண்டிருந்த போது பேருந்து சாரதி யின் கட்டுப்பாட்டை இழந்து சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தக் கோர விபத்தில் பேருந்தில் பயணம் செய்த 19 பேர் உயிரிழந்தனர். மேலும், 30 பேர் படுகாயம டைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்த்த னர். மேலும், இந்த விபத்து குறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 3 நாள் பயணமாக ரஷ்யா வந்தடைந்தார் சீன அதிபர்

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் அழைப்பை ஏற்று சீன அதிபர் ஜி ஜின்பிங் மூன்று நாள் பயணம ாக இன்று ரஷ்யா வந்தடைந்தார். அவருக்குச் சிறப்பான வரவேற்பு வழங்கப் பட்டது.

இந்தப் பயணத்தில் தலைநகர் மொஸ்கோவில் புடினைச் சந்தித்து பேச்சு நடத்த உள்ளார் சீன அதிபர். அப்போது உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பிலும் கலந்துரையாடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து புடினுக்கு ஜி ஜின்பிங் ஆலோசனைகளை வழங்குவார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

உக்ரைன் போரில் சீனா நடுநிலை வகிப்பதாக கூறுகிறது. ஆனால் சீன அரசு ரஷ்யாவுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வ தாக அமெரிக்கா குற்றஞ் சாட்டியுள்ளது. இதனை சீனா திட்டவட்டமாக மறுத்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் புதினுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக ஜி ஜின்பிங்கின் இந்த மூன்று நாள் பயணம் அமைந்திருப்ப தாக பேசப்படுகிறது.



போரை நிறுத்த அனைத்து நாடுகளின் இறையாண்மைக்கும் மரியாதை அளிப்பது உள்ளிட்ட சீனாவின் 12 அம்ச யோசனை குறித்தும் இந்தப் பயணத்தில் ஆராயப்படவுள்ளது. ஆனால் இந்த யோசனைகளை உக்ரைன் ஏற்கனவே நிராகரித்துவிட்டது.

உக்ரைன் பற்றிய சீனாவின் கருத்துக்களை புடின் ஏற்கனவே வரவேற்றுள்ளார். மோதலை முடிவுக்கு கொண்டு வருவதில் ஆக்கப்பூர்வமான பங்களிப்பை வழங்குவதில் விருப்பம் காட்டுவ தாக சீனாவின் கருத்துக்கள் இருப்பதாக அவர் கூறினார். சீன-ரஷ்ய உறவுகள் உயர்ந்த நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். சீன அதி பர் ஜி ஜின்பிங் தனது சுற்றுப்பய ணத்தை முடித்துக்கொண்டு மார்ச் 23 நாடு திரும்புகிறார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.03.2023 இல் வெளியிடப்பெற்றது.